தென்றல்

ஆசிரியர் கண்ணதாசன்

உள்நாடு (இலங்கை உட்பட) விலை 16 புதிய காசு | வெளிநாடு 20 காசு | அலுவலகம்: 'தென்றல்', சென்னை - 6.

மலர் 5 | சென்னை. திருவள்ளுவர் ஆண்டு 1990, வைகாசி 23 (6-6-'59). சனிக்கிழமை | இதழ் 51

டாலர் மாமா டல்லெஸ்!

28-2-1888! அன்று பிறந்த டல்லெஸ் வரலாற்றில் நல்ல இடம் பெற்றுக்கொண்ட ஒரு குடும்பத்தைச் சேர்ந்தவர். இவரது தாத்தா ஜான் வாட்சன் பாஸ்டர் என்பார் ராஜாங்கச் செயலாளர் பதவியில் இருந்தவர். டல்லெஸின் மாமாவான ராபர்ட் லான்சிங் என்பவரும் அப்பதவி வகித்திருக்கிறார். இவர் வாஷிங்டனில் பிறந்தார். உயர்நிலைப் பள்ளிப் படிப்பு முடிந்த பின்பு தனது தாத்தா பாஸ்டரின் விருப்பப்படி ஸ்விட்ஸர்லாந்து சென்று, அங்கு ஆறு மாதம் பிரெஞ்சு மொழி கற்றார். பிரின்ஸ்டன் பல்கலைக் கழகத்தில் இவர் இருந்தபோது, தாத்தா பாஸ்டர் திஹேக்கில் நடந்த சமாதான மாநாட்டுக்குச் சென்றார். தாத்தாவுடன் பேரரும் சென்றார். 1908-ல் பிரின்ஸ்டனில் பட்டம் பெற்ற இவர், மேலும் பல வெளி நாடுகளுககுச் சென்று கல்வி கற்றார். சார்போனியில் கற்றபின் 1909-ல் வாஷிங்டன் பல்கலைக்கழகச் சட்டக் கல்லூரியில் சேர்ந்தார். மூன்றாண்டுப் பயிற்சியை இரண்டாண்டில் முடித்து, இதுவரை யாரும் காட்டாத வெற்றியைக் காட்டி வெளியேறினார்.



சட்டப் படிப்பு முடிந்ததும் தன் தாத்தா உதவியால், சல்லிவான் கிராம்வெல் என்ற நிறுவனத்தில் சேர்ந்தார். அது அனைத்து நாடுகளிலும் புகழ்பெறற சட்ட ஆலோசனை நிறுவனமாகும். படிப்படியாக உயர்ந்து தம் நாற்பதாவது வயதில் அங்கிலையத்தின் தலைவரானார். இதற்கிடையில் தன் மாமா லான்சிங் உதவியாலும் பல வாய்ப்புக்களைப் பெற்றார். 1917-ல் மத்திய அமெரிக்க ராஜாங்கத் துறையின் சிறப்புப் பிரதிநிதியாக நியமனம் பெற்றார். 1919 20 ல் பாரிசில் நடந்த சமாதான மாநாட்டுக்குச் சென்ற அமெரிக்க ஐக்கிய நாடுகள் குழுவின் தனிப்பெரும் தூதுவராகச் சென்றார்.

டல்லெஸ் மத வெறிகொண்டவர் என்பதை மறக்கமுடியாது. புரட்டஸ்டண்ட் பிரிவைச் சேர்ந்த இவர், அங்கிருந்த மாதா கோவில்களின் கூட்டுக் குழுவில் பெரும் பங்கு கொண்டிருந்தார். எனவே, அவர் மதத்தையும் அரசியலையும் கலந்தே-இணைத்தே பார்க்கத் தொடங்கினார். அரசியல் உலகில் கிருத்தவ நெறிகளைப் பரப்ப வேண்டியது அவசியம் என்றும் அவர் கருதியது உண்டு.

1939-ல் இரண்டாம் உலகப் பெரும் போர் வெடிப்பதற்குமுன்னம் "ஜெர்மனியோ, ஜப்பானோ, இத்தாலியோ நம்மீது போர் தொடுப்பதாக நாம் நினைப்பது, ஹிஸ்டீரியாபோன்ற ஒருவகை மன நோயின் விளைவுதான்!" என்றார் டல்லெஸ். ஆனால் பேர்ல் துறைமுகத்தில் குண்டு வீசப்பட்ட பின்னர் இவர் கருத்து மாறிதாம் 1943 ல் நடந்த மாக்கிநாக் மாநாட்டில் குடியரசுக் கட்சி, தன் போக்கை மாற்றிக்கொள்வதற்குப் பெரும் துணையாய் நின்றார்; தூண்டுகோலாய் அமைந்தார். அது முதல் கட்சியின் செயல்களிலே முக்கிய ஈடுபாடும் வகிக்கத் தொடங்கினார். காலஞ்சென்ற ஆர்தர் எச். வேண்டன்பெர்க் என்ற "செனேட்டர்"ரோடு சேர்ந்து கட்சியின் வெளிநாட்டுக் கொள்கைகளை உருவாக்கத் தொடங்கினார்; அதை மதிப்போர் தொகையும் பெருகியது, அக் கட்சிக்குள்.

இத்தகு போக்குகளால் 1945-ல் சான்பிரான்சிஸ்கோவில் நடந்த ஐக்கிய நாடுகள் கூட்டத்திற்குத் தன் நாட்டின் பிரதிநிதியாய்ச் செல்லும் வாய்ப்பைப் பெற்றார், அற்றைய ஜனாதிபதி ரூஸ்வெல்டின் மூலமாக. பின்னர் ஆண்ட ட்ரூமன் ஆட்சியில் ராஜாங்கச் செயலாளர்களாயிருந்த ஜேம்ஸ் எப். பைரன்ஸ், ஜார்ஜ் சி. மார்ஷல், டீன் அக்கீஸன் முதலியோர்க்கு, அவர்கள் கலந்து கொண்ட அனைத்து நாடுகள் மாநாடுகளில் ஆலோசகராகப் பணியாற்றி உதவினார் டல்லெஸ். 1949-ல் நியூயார்க்கைச் சேர்ந்த செனேட்டர் ராபர்ட் எப். வேக்னர் என்பவர் நோயுற்றார். எனவே அவரது இடத்தை நிரப்ப, அங்கிருந்த கவர்னர் தாமஸ் இ. டீவெய் என்பவர் டல்லெஸை செனேட்டர் ஆக்கினார். முன்னாள் கவர்னரான ஹெர்பர்ட் எச். லெக்மான் என்பவரை எதிர்த்து 1950 தேர்தலில் போட்டியிட்ட டல்லெஸ் பலத்த தோல்வியடைந்தார். ஆனாலும் ராஜாங்கத் துறையில் இவர் ஒத்துழைப்பு மிகத் தேவைப்பட்டதால், செயலாளர் அக்கீசனுக்குச் சிறப்புத்துணையாக அமர்த்தப்பட்டார். ஜப்பானுடன் செய்துகொள்ளப்பட்ட 1950-ல் சமாதான உடன்படிக்கைக்காக இவர் கொண்ட முயற்சிகள் பன்னூறு. இடையிடையே பலத்த எதிர்ப்புகள் கிளம்பத்தான் செய்தன. எதிர்ப்பிடையும் தொண்டிடையும் வளர்ந்த இவரது கருத்துரைகள் 1952 ல் கூடிய மாநாடு ஆய்ந்து கவனித்தது. குடியரசுக் கட்சியில் ஐசனோவர் அணி, டாப்ட் அணி என இரண்டு குழுக்கள் உண்டு. இவ்விரண்டு அணியும் டல்லெஸின் கருத்துக்களை ஏற்றன. டல்லெஸ் கட்சியின் வெளிநாட்டுகொள்கையை வகுத்தார். தேர்தல் வந்து முடிந்தது. ஜனாதிபதியான ஜனாதிபதி ஐசனோவர் தனது ராஜாங்கக் காரியதரிசியாக இவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார். ராஜாங்கத்துறை என இங்கு வெளிநாட்டு மந்திரியின் துறையைக் குறிக்கிறேன். அன்றிலிருந்து இன்றுவரை அயராது உழைத்தார். தான் கொண்ட கொள்கைகளுக்குப் பாடுபட்டார், தளராது. இந்தப் பெருமைகள் அவருக்கு என்றும் உண்டு. **உண்மையிலேயே** அவர் டல் (சோம்பல்) லெஸ் (குறைச்சல்) ஆன மனிதர்.

ட்ரூமன், ரூஸ்வெல்ட் போன்றோர் முதலில் இவரின் பணிகளைச் சந்தேகத்துடன் நோக்கியதுண்டு. நெடுக வளர்ந்து, பழுப்புமயிருடன் கல்லூரிப் பேராசிரியர்போல் தோற்றமளித்த இவரது வாழ்வு சிறந்த அரசியல்வாதியின் வாழ்வாகுமா என அன்னார் அய்யப்பட்டதுண்டு. ஆனால் விடாத முயற்சியால்-வரலாற்றில் தனக்கும் ஒரு தனி இடத்தை நிலைநாட்டி விட்டார் இவர்.

ஜேனட் போம்ராய் ஆவ்ரி என்ற அம்மையாரை 1912-ல் மணந்தார். ஒரு மகளும் இரண்டு பையன்களும் இருக்கின்றனர். பையன்களுள் ஒருவர் கத்தோலிக்க மதத்தில் சேர்ந்ததோடு, குருவாகவும் ஆகி, தந்தையின் அளவற்ற ஆசைகளை நொறுக்கி விட்டார். டல்லெஸ் வசதியான வாழ்வை நாடியவர். மான்ஹாட்டனில் ஒரு மாளிகையும், நியூயார்க் கோல்ட் ஸ்பிரிங் துறைமுகத்தில் ஒரு கோடைக்கால மாளிகையும், ஒண்டாரியோ ஏரியில் அவருக்கே சொந்தமான ஒரு சிறு தீவும் இருக்கின்றன வேட்டையும், மாண்டராச் செட் ஒயினும், நல்ல உணவும் அவருக்குப் பிரியமானவை. கேளிக்கைப் படகில் சுற்றுதலும் அவருக்குப் பிடிக்கும்.

கடுமையான உழைப்பின்பேரில் தனது கருத்துக்களை நிலைநாட்டிக் கொண்டுவந்த டல்லெஸ் தமது 72-ம் வயதில்புற்றுநோய்க்காளனார். அரசைச் சேர்ந்த படைஞருக்கான மருத்துவமனை ஒன்றில் அனுமதிக்கப்பட்டார். இப்படி உள்ள ஒரு நண்பரை இழக்க மனமில்லாத ஐசனோவர் அடிக்கடி அவரைக் கண்டுவந்தார். எனினும் புற்றுநோய் கழுத்துப் பகுதியில் முழு ஆதிக்கம் செலுத்தவே அமெரிக்க ஐக்கிய நாடுகளின் சட்டப்படி மேற்கொண்டு பதவியில் இருக்க வியலவில்லை. ராஜாங்கக் காரியதரிசி பதவிக்கு கிறிஸ்டியன் ஹெர்ட்டர் என்பார் நியமிக்கப்பட்டார். டல்லெஸ் தனது பழைய இடத்தை இழந்தாலும், ஐசனோவரால் அவரின் அந்தரங்க ஆலோசனையாளராய் நியமிக்கப்பட்டார். என்றாலும் கடந்த மே 24-ம் தேதியோடு அவர் வரலாறு முடிந்துவிட்டது. வரலாறு முடிந்துவிட்டாலும், அவர் வளர்த்து விட்ட பிரச்னைகள் முடியவில்லை. 'பாஸ்டர்" என்று அழைக்கப்பட்டார் இவர் தன் நண்பர்களால்.

— 12-ம் பக்கம் —

வலிவான வாதமில்லை! வளமான கருத்தில்லை!

தமிழகத்தில் சில அற்புதப் பிறவிகள்! தலை தெறிக்க, குடல் தள்ள, நாக்கு வெளியே வர அந்தப் பிறவிகள் ஓடுகின்றன! சமயா சமயத்தில் அவற்றின் உலக்கைக் கொழுந்து அறிவு தீவட்டியெனச் சுடர்விட்டுப் பிரகாசிக்கும். அப்போது அவற்றின் "மூஞ்சி"யைப் பாருங்கள். ஆகா! குரங்கு தோற்கும்; கரடி மாளும்; தேவாங்கு வெருண்டோடும்! அத்துணை "சுந்தர சோபித செளந்தர்ய"த்துடன் விளங்கும் அந்தத் "தெரு அவதாரங்கள்"!

அந்தப் பிறவிகளுக்குச் சில அற்புதப் பண்புகள் உண்டு!

ஊர்ப் பணத்தில் தேரோட்டுவதில் மன்னாதி மன்னர்கள், அவர்கள்! அழையாத வீட்டில் நுழைந்து துதி பாடித் தொந்தி வளர்க்கும் வீராதி வீரர்கள், அவர்கள்! தகர டப்பாவும், வாடகை வாயும், கூலிக் கொடியுமே அவர் தம் உடைமைகள்! வேங்



கடத்துத் தோல்வியும், பீர்மேடு இழப்பும், பிய்ந்த "ரப்பர் பொம்ம"னுமே அவர்கள் கண்ட வெற்றிச் சின்னங்கள்! இத்துணைக்கும்மொத்த உரிமையாளராய் இருக்கும் ம. பொ. சி. எனப்படும் ஒருவர் அடிக்கடித் தம் வாய்தனைத் திறக்கத் தொடங்கிவிட்டார்.

கூழுக்குப் பாட்டுப் பாடினளாம் ஒரு தமிழ்ப்பெண்; சரித்திரம் சொல்கிறது. கூலிக்கு மாரடிக்கின்றனர் சிலர். இது நிதர்சனம் காட்டும் உண்மை! எங்கேயோ பெற்ற கூலிக்கு எவர் எவர் மீதோ பாயும் இந்தக் குணாளர்கள் அந்தத் தமிழ்ப் பெண் கற்றுத்தந்த நல்ல பண்பைச் சிதைத்துவிட்டனர். வயிருர உணவு தருவோர்க்கும் வாழ்வளிப்போர்க்கும் நன்றி தெரிவித்தது அன்றையத் தமிழர் பரம்பரை. இன்று இந்தப் பரம்பரை சோறு போட்டவனை யோக்கியன் என்றும், மற்றவனைக் கீழோன் என்றும் தூற்றுகின்றது. அந்தப் பரம்பரைக்கு நன்றியுடன் அறிவும் இருந்தது. இந்தப் பரம்பரைக்கு... என்ன செய்வது? தமிழகத்தில் இவையும் பிறந்திருக்கின்றனவே! "அன்னையே! நீ என்ன தவறு செய்தாய்!" என்று வருத்தப்படுவதோடு நாம் நிற்க நினைத்தாலும் அவை நம்மை விடாது பிராண்டுகின்றன இரட்டை நாக்கும் நான்கு கால்களும் படைத்த இந்தப் பிறவிகள் அண்மையில் தம் தலைவர் கட்டளைப்படி நம்மீது பாய்ந்திருக்கின்றன.

"தென்றல்" தனது மே 9-ம் தேதி இதழில் ம. பொ. சி. கழகத்தாரின் திருவிளையாடல்களை விமர்சித்திருந்தது. அவர்களது அவசர புத்தியையும், அவசியமற்ற தலையீட்டையும் நாம் கணித்துக்காட்டிக் கண்டித்திருந்தோம். எழுதுகோலாலும் வலிவான வாதத்தாலும் பதில் சொல்லத் திறனற்றோர் தம் நாய்களை ஏவிவிட்டிருக்கின்றனர். மற்ற அரசியல் தலைவர்கள் தமக்குப்பின் நல்ல பாரம்பரியத்தை வளர்த்திருக்கின்றனர்; வளர்க்க முயன்றிருக்கின்றனர். அண்ணாவுக்குப்பின் நல்ல முத்துத்தம்பிகள் அணி வகுத்து நிற்கின்றனர். ஆனால் இந்த ம. பொ. சி. தனக்குப்பின் ஒரு வெறி பிடித்த பரம்பரையை வளர்த்திருக்கிறார். தனக்குப் பிடிக்காதாரையோ, தனக்கு வேண்டியோர்க்குப் பிடிக்காதாரையோ கண்டுவிட்டால் "சூ" காட்டுவதில் அவருக்கு நிகர் அவரே! நமக்கெல்லாம் அந்தக் கலை வரவே வராது எத்துணை நாள் "பயிற்சி" எடுத்துக்கொண்டாலும். அது அவருக்கே கிடைத்த தனிப் பெருஞ் சொத்து! அது அவருடன் மட்டுமே இருக்கட்டும்; நமக்குக் கவலையில்லை! இப்போது அவரின் சீட கோடிகள் நம்மீது பாய்கின்றன. அந்தப் பாய்ச்சலில் ஒன்றுக்குத் "தென்றலும் மொட்டையும்" என்று தலைப்பு வந்திருக்கிறது. அவ்வெறி நாயின் கூச்சலுக்குப் பொருளில்லை; வலிவில்லை. எனினும் இப்படியே விட்டுவிட்டால்அப்பாவி மனிதர்க்கும் ஆபத்துப் பல வருமே என்பதனால் அதனைக் கண்டிக்கக் கடமைப்பட்டுள்ளோம். "அதோ, வெறி நாய்! விலகிச் செல்லுங்கள்!" எனச் சுட்டிக் காட்டவும் நாம் கடமைப் பட்டுள்ளோம்.

ஈய வாளும், வெங்காய வேலும் ஏந்தி சுடுகாடு நோக்கிச் சென்று பிணங்களைக் குத்திக் கிழித்து விட்டு, "ஆகா, பார்த்தாயா? மாய்ந்தனர் எதிரிகள்! சாய்ந்தனர் பகைவர்கள்! இதுவன்றோ 'போர்-களம்!'" எனக் கொக்கரிக்கும் வீராதிவீரர் ஒருவர் கிளம்பியிருக்கிறார். அவரது வரலாறும் நமக்குத் தெரிந்ததே! அந்த ரசம் போன கண்ணாடிகள் கூறுகின்றன, நாட்டு நிலையை அவை தாம் பிரதி பலிப்பதாக. பெற்ற கூலிக்குக் கத்துவதைத் தவிர வேறு ஒன்றையும் அவை செய்துவிடவில்லை.

"இந்த கண்ணதாசனும் ஆசைத் தம்பியும் செய்கிற அர்த்தமற்ற ஆர்ப்பாட்டம் காரணமாக கழகத்தின் மானம் போவதுதான் மிச்சம்" என்றாராம் அண்ணா. இதை எப்படிக் கேட்டு வந்தது இந்தப் பிறவி? வீட்டுக்கு வீடு சென்று ஒட்டுக் கேட்பது, வாசற்படியில் நின்று கொண்டு வாலையாட்டும் இந்தப் பிறவிக்கு எப்படி வந்தது? அந்தக் கலை அவற்றின் பார்ப்பன குருக்களுக்குத்தானே வரும்!

கண்ணதாசனும் ஆசைத் தம்பியும் உள் வட்டத்திலேயே விலை போகாத சரக்குகளாம்! எதையும் வியாபார நோக்கத்திலேயே மதிப்பிடும் இந்த மூர்மார்க்கெட் ஆசாமி, தன்னைப்போல் மற்றவரையும் நினைக்கின்றதே! வாயை வாடகைக்கு விட்டு வயிறு வளர்க்கத் துடிக்கும் நீயா கூறுகிறாய்? அப்பனே! அறியாமை, உன்னை அணைத்துக் கொண்டுள்ளது கண்டு வேதனைப் படுகிறேன். எம். எல் ஏ. ஆகப் பணியாற்றும் ஆசைத்தம்பி அவர்கள், உள் கட்சியிலேயே விலைபோகாத வராம்! தலைமைச் செயற்குழுவின் உறுப்பினராகவும் பணியாற்றும் ஆசைத்தம்பி அவர்கள், மட்டமான சரக்காம்! ஆசிரியர் கண்ணதாசனின் திறமையையும் அறிவையும் கழகமும் தமிழ் உலகமும் அறியும். அதை நாமே விளக்கவேண்டியதில்லை! ஆனால், உனக்கோ உறுதியான இடமுமில்லை; உருவான கட்சியுமில்லை. நீ பேச வந்திருக்கிறாய் கட்சி அரசியலை! தி. மு. க. தோழர்கள் எவருமே கண்ணியமான அரசியலையும் பெருமையான வாழ்வையும் தளரவிட்டோரில்லை. அவர்களுள் எவரும் சோடை போனதோ, சொத்தை ஆனதோ கிடையாது.

நிற்க, ம. பொ. சி. கழகத்தினர்க்கு நாட்டிலே தாராளமாக உலவ வாய்ப்பும் வசதியும் இருக்கிறதாம். நாய்கூடத்தான் "உலா" வருகிறது தெருவில்! இதில் உனக்கென்ன தனிப் பெருமை! குப்பைக்காகிதம் கூடத்தான் காற்றுவாக்கில் தெருத் தெருவாய்ச் சுற்றி வருகிறது! இதில் என்ன உனக்குத் தனிப் பெருமை?

தமிழரசுக் கழகம் சென்னை நகர சபைத் தேர்தலில் போட்டியிடாமல் இருந்ததால்தான் தி மு க. வெற்றி பெற்றுவிட்டதாம். அடடா! எத்துணைப் பெரிய உண்மையை ஒரே மூச்சில் சொல்லிவிட்டார்! தமிழரசுக் கழகம் தேர்தலில் போட்டியிட்டதாக எவனய்யா சொன்னது? நேரடியாகப் போட்டியிடத் துணிச்சல் இல்லாத உம் கழகத்தவர், தனிப்பட்ட முறையில் போட்டியிடவில்லையா? அப்படிப் போட்டியிட்டோர் என்ன சாதித்து விட்டனர்? நகர சபைத் தேர்தலுக்கும் ம. பொ. சி. கழகத்துக்கும் ஏதும் தொடர்பில்லை என்று வேறு எழுதுகின்றனர். தொடர்பில்லை, உம் கட்சி நேரடியாகப் போட்டியிடவில்லை என்ற அளவுவரை. ஆனால் உம் கட்சியின் தலைமை அலுவலகம் தேர்தலில் இன்னின்னாரை ஆதரியுங்கள் என்று அறிக்கை விட்டதன் நோக்கம் யாது? தொடர்பில்லாத இயக்கம், தேர்தலில் இன்னின்ன உறுப்பினர்கள் போட்டியிடுகின்றனர் என்று அறிவிப்பது ஏன்? ம. பொ. சி. தேர்தலை விமர்சனம் செய்தது ஏன்? ம. பொ. சி. கட்சிக்

கண்ணோட்டத்துக்கு அப்பால் நின்றுதான் விமர்சனம் செய்தாராம். ஒரு கட்சியின் தலைவர் எனப்படுபவர் அரசியல் நிகழ்ச்சிகளை அப்பால் நின்று விமர்சிக்க வேண்டிய அவசியம் என்ன? என்ன? கட்சி என்று அவர் சொல்லிக்கொள்வதற்குள் கேட்பதற்கு ஆள் இல்லையா? அல்லது "அப்பால் நின்று விமர்சித்தால் அப்பாவிகளாகிலும் கேளாரோ?" என்ற நப்பாசையா? என்ன திட்டமோ, கூலிக்கு மாரடிக்கும் அந்த வேங்கடத்தலைவர்க்கு? தி. மு. க. வெற்றியால் தமிழரசுக் கழகம் பாதிக்கப்படவில்லை என்றே கொள்க. ஆனால் பாதிக்கப்படாத ம. பொ. சி. கழகத்தார், பாய்ந்து விழுவது ஏன்? அரசியலில் மொட்டையாகிவிட்ட ம. பொ. சி. கழகம் குதிப்பதேன்? அது மொட்டைத்தலை மட்டுமல்ல; சொட்டையும் விழுந்த தலையாகி

— 3-ம் பக்கம் —

வாடகை வாயுண்டு! கூலிக் கொடியுண்டு!

> "போற்றுபவர் போற்றட்டும்; புழுதி வாரித்
> தூற்றுபவர் தூற்றட்டும்; தொடர்ந்து செல்வேன்
> ஏற்றதொரு கருத்தை என(து) உள்ளம் என்றால்
> எடுத்துரைப்பேன்; எவர்வரினும் நில்லேன்; அஞ்சேன்!"

தென்றல்

மலர் 5 ‖ 6–6–'59 | இதழ் 51

மதுரை ஆலையில்...

ஆரிப்புலிகளைத் தூண்டிவிடுகின்றனர்; வாடிய வயிற்றுக்காரர்களை வம்புக்கு இழுக்கின்றனர்; துன்பம் குடையும் நெஞ்சினரைக் குத்துகின்றனர். யார்? எங்கே?

வறுமைப் பளுவையும், பிணிச்சுமையையும் தாங்கித் தாங்கி வளைந்து போன முதுகின்மேல் வேலைப்பளுவை-வேதனை மூட்டையை ஏற்றுகின்றனர்! எவர்? எப்படி?

மதுரை நகரின் புகழ் வளர்க்கும் புதுமைத் தொழில்களுள் ஒன்று பஞ்சாலைத் தொழில் ஆகும். எண்ணிக்கையில் குறைவுதான் மதுரையில் இருக்கும் ஆலைகள். ஆனால் அளவில் பெரியன அவை. அவற்றுள் ஒன்று ஏ. & எப். ஹார்வி மில்ஸ் எனப்படுவதாகும். அதன் மூலதனம் பெரும்பான்மையும் வெள்ளைக்காரர்களால் போடப்பட்டது. ஆனால் இன்று செட்டிநாட்டரசர் போன்ற இந்திய முதலாளிகளின் கையும் இதில் ஓங்கியுள்ளது. இந்த ஹார்வி நிர்வாகத்தில் மதுரா ஆலையும், மதுரை பாண்டியன் ஆலையும், விக்ரமசிங்கபுரம், அம்பாசமுத்திரம், தூத்துக்குடி போன்ற இடங்களில் உள்ள ஆலைகளும் அதனையொட்டிய அமைப்புக்களும் உள்ளன. இத்தனையிலும் மொத்தம் 22 ஆயிரம் தொழிலாளர்கள் பலவகையிலும் பணிபுரிகின்றனர். இவர்கள் பலமுறை நிர்வாகத்தினரால் கொட்டப்பட்டும், பழிவாங்கப்பட்டும் இளைத்துள்ளனர். அல்லாது கடந்த ஆண்டு இந்த வெள்ளை நிர்வாகம், நிர்வாகச் சிக்கனம் என்ற பெயராலும் வேறு பெயராலும் தொழிலாளர்மீது வேலைப்பளுவைச் சுமத்திற்று. கிளர்ந்த தொழிலாளர், தமக்கிழைக்கப்படும் அநீதியைச் சுட்டிக்காட்டினர். சென்னை அரசும் அதன் தொழில் அமைச்சர் வெங்கட்டராமனும் எதை எதையோ சாதித்துவிடுவதுபோல் முயன்றனர். சபாநாயகம் என்ற ஐ. ஏ. எஸ். அதிகாரியையும் நியமித்தனர், இதில் உள்ள சிக்கல்களை விசாரித்து வர. அவர் நடத்திய விசாரணையோ தனி வழியானதாலும் நிர்வாகத் தரப்பினருடைய கருத்தை மட்டும் செவிமடுத்த நிலையில் திரும்பிய அவரது தீர்ப்பு எந்த வாழ்வையும் தந்துவிடவில்லை. இதனால் தொழிலாளி மேலும் துன்பம்தான் அடைந்தானே தவிர, வேறு நலன் ஒன்றும் இல்லை. இத்துணைக் கொடுமைகள் நடந்தும் அங்குள்ள நிலையை மாற்ற அரசினர் கருத்துக்கொள்ளவில்லை. எனவே இந்தக் கொடுமையைக் கண்டித்த தொழிலாளர்களைக் கொன்று தீர்க்க, ஆலை நிர்வாகம் கதவடைப்பு செய்துள்ளது. இதனால் உண்டியல்மூலம் நிதி திரட்டி வாழவேண்டிய அவல நிலைக்கு இந்த 22000 தொழிலாளரும் பலியாகியுள்ளனர். இதனைக் கண்டித்து, நீதிகோர மதுரையில் உள்ள அரசியல் இயக்கத்தோர் ஒரு கூட்டணி அமைத்துள்ளனர். அதன் பயனாக 2-6-59 தேதி மதுரையில் தி. மு. க. உள்ளிட்ட எல்லா இயக்கத்தினரும் கூடிய கூட்டணியினர் ஊர்வலம் ஒன்றும் பொதுக்கூட்டம் ஒன்றும் நடத்திக் கூட்டணியின் கொள்கைகளை விளக்கியுள்ளனர்; தொழிலாளர் நல்வாழ்வுக்கான வழிகளை வகுத்துள்ளனர். அதற்குமுன் 31-5-59 மாலை மதுரையில் நடந்த தி. மு. க. பொதுக்கூட்டத்தில் நமது நகராட்சி உறுப்பினர்கள் திரு. எஸ். முத்து அவர்களும் திரு. கே. எஸ். சந்தானம் அவர்களும் ஆசிரியர் கண்ணதாசனும் நம் கொள்கைகளைத் தெளிவாய் விளக்கியுள்ளனர். அவசியம் ஏற்பட்டால், நிர்வாகம் தம் ஆணவத்தைத் தளர்த்திக்கொள்ளாவிட்டால், தி. மு. கழகத் தோழர்களும் கலந்துகொண்டு தம்மாலான வழியில் எல்லாம் போராடுவர் என்றும் கூறியுள்ளனர். இதுபற்றி நமது நிருபர் மதுரை சென்று கண்டறிந்த உண்மைகள் அடுத்த இதழில் வெளி வருகிறது. இந்த எழுச்சியைக் கண்டும் அதிகாரம் இறங்கி வராவிட்டால்,......

ஆணவக் கொடுமுடி ஏறி நின்றோரின் இதழ்கள் ஆனந்த கீதத்தை நெடுநாள் பாடியதில்லை! கொடிய உள்ளமும், கடினப் பேச்சும், என்றும் வென்றதில்லை! மண்டை ஓடுகளை விரும்பினோர், தம் மூச்சுச் சுழிப்பைக் காப்பாற்றிக்கொண்டதில்லை! வரலாறு தரும் இந்தப் பாடத்திற்கு வணங்கப் போகின்றனரா? "வளையாது நிற்போம்!" எனக் கொக்கரிக்கப் போகின்றனரா? நடக்கப் போவது எது? ஒன்றுமட்டும் உறுதி! தொழிலாளரைப் பகைத்துக்கொண்டோர் என்றும் வாழ்ந்ததில்லை! ★

— 2-ம் பக்கத் தொடர்ச்சி —

விட்டது எந்த மருந்தாலும் மாற்ற முடியாதபடி சொட்டையாகிவிட்டது என்பதைத்தான் காட்டுகிறது, அக் கட்சியினர் பேச்சு.

தி. மு. க. தேர்தலில் வென்றதன் மூலமாகமாக, ம. பொ. சி. கழகத்தார் தம் செல்வாக்கை இழந்தனர் என்று நான் கருதவில்லை. என்றைக்குமே செல்வாக்கு அற்ற அக்கட்சியார்க்கு, இன்றைக்கென்று இழக்க என்ன இருந்தது? இனிமேல் அவர்களிடம் இழப்பதற்குரியனவாக உள்ளவை எல்லாம் அவமானம், கைக்கூலித்தனம், ஏமாற்று வேலைகள் முதலியனதாம்!

ஓட்டைகள் ஓராயிரம் உள்ள இந்தப் பிளாட்பாரப் புலவர், இலக்கணப் புலியாவதற்கு வேறு முயல்கிறார். அடடோ! தமிழகமே, ஆரத்தி எடுத்து வா, இந்தப் பூரணச் சந்திரனுக்கு! அப்பாடா! எங்கிருந்தய்யா இந்த ஆராய்ச்சிகள் பொத்துக்கொண்டு வருகின்றன! கூவம் நதி தோற்றது, போம்! உம் ஆராய்ச்சித் திறனையும் அறிவுச் செறிவையும் எங்கே அய்யா பதுக்கி வைத்திருந்தீர்? காப்பியனும் பவணந்தியும் உம்காலடியில் விழுந்து கிடக்கின்றனரே-பரிதாபம்! ஆசீர்வதித்து எழுப்பிவிடுக! தமிழ் இலக்கிய இலக்கணக் கடலே! புலமை மலையே! தாங்கள் தந்த பொருள் விளக்கத்திற்குக் கோடானு கோடி நன்றி! ஆனால், தமிழய்யனே! தடிப்பையனே! ஒரு அய்யம், தாங்கள் தமிழில் கற்றது எத்துணை நூலோ? "தென்றலும் மொட்டையும்" என்று தாங்கள் போட்டதிலிருந்து, தங்களைத் தாங்களே மொட்டை என்று ஒப்புக்கொண்டு விட்டீர்கள். மெத்த நன்றி அந்த உண்மையை ஒப்புக்கொண்டதற்கு! "செஞ்சொற் புலவர்" என்று தங்கட்குப் பட்டம் சூட்ட நினைத்திருந்தோம். தாங்களே மொட்டை என்று ஒப்புக்கொண்டதால், இனி மொட்டையாண்டி என்றே அழைக்கலாம் என நம்புகிறேன் ஆனால், தமிழ்க் காவலரே! பிளாட்பாரப் புலவரே! குவலய மரியா மாணிக்கமே! குறை குடத்தொரு கூழாங் கல்லே! உம் சொல்லின் பொருளையும் சொல்லாட்சியின் வளத்தையும் அடுத்த இதழில் காண்போம்!

| மா பாண்டியன்

திருமணம்

ராயன் & கோ (பிளாக் மேக்கர்ஸ்) உரிமையாளர் திருவாளர் தியாகராஜ முதலியார் அவர்களின் செல்வி **கமலாவுக்கும்** திரு. **அம்பலநாதன்** பி. ஏ. அவர்கட்கும் சென்னை இராயப்பேட்டையில் 27-5-'59 அன்று திருமணம் இனிதே நடந்தேறியது. புது மணமக்களுக்கு நம் வாழ்த்துக்கள். வாழ்க! வாழ்க!

கண்ணதாசன் நிகழ்ச்சிகள்

7-6-'59 காலை-இராமநாதபுரம்-
சிறப்புச் சொற்பொழிவு.
மாலை-திருப்புவனம்-
பொதுக்கூட்டம்.

சதகப் போட்டி - ஓர் அறிவிப்பு.

தென்றல் நண்பர்களே, சதகப் போட்டியில் பங்கெடுத்துக் கொள்ள அழைத்திருந்தோம். தோழர்கள் பலரும் எழுதியிருந்தனர், பல பாடல்களை. ஆனால் அவை சதகத்திற்குரிய இலக்கணங்களோடு அமையவில்லை. கீழே குமரேச சதகத்திலிருந்து எடுத்த ஒரு பாடலைத் தந்திருக்கிறோம். ஆழ்ந்து படித்தால் சதகத்தின் இலக்கணம் தெரியும். இதனை முன்மாதிரியாகக் கொண்டு மறுபடியும் எழுதுக. நண்பர்களின் ஆர்வம் போதிய அளவு வளரவில்லையானால், மறுபடியும் வெண்பாப்போட்டி அல்லது விருத்தப்போட்டியைத்தான் தொடங்கவேண்டி வரும்.—(ஆ-ர்.)

சந்தன விருட்சத்தை அண்டிநிற் கின்றபல
தருவும்அவ் வாசனை தரும்
தங்கமக மேருவை அடுத்திடும் காக்கையும்
சாயல்பொன் மயமே தரும்

பந்தமிகு பாலுடன்வ ளாவியத ணீரெலாம்
பால்போல் நிறங்கொடுக் கும்
படிகமணி கட்குளே நிற்கின்ற வடமும்அப்
படியே குணங்கொடுக் கும்

அந்தமிகு மரகதக் கல்லைத் தரித்திடில்
அடுத்ததும் பசுமையா கும்
ஆனபெரி யோர்களோடு சகவாசம் அதுசெயின்
அவர்கள்குணம் வருமென்பர் காண்

மந்தர நெடுங்கிரியின் முன்கடல் கடைந்தஅரி
மருகமெய்ஞ் ஞானமுரு கா
மயிலேறி விளையாடும் குகனேபுல் வயல்நீடு
மலைமேவு குமரேச னே.

—குமரேசசதகம்.

சர்வாதிகாரப் புலவர்கள்!

சாம்ராஜ்யக் கனவுக்காரர்கள்!

மாண்டெஸ்க்யூ, வால்டேர், ரூசோ போன்ற தலைசிறந்த அரசியல் விற்பன்னர்களின் உணர்ச்சிமிக்க எழுத்துக்கள் பிரான்ஸ் தேசத்து மக்களுக்கு புதுரத்தம் பாய்ச்ச, அதன் பயனாக பிரெஞ்சு மக்கள் அரசனின் யதேச்சதிகாரப் போக்கிற்கும் பிரபுக்களின் காட்டுத் தர்பாருக்கும் முற்று புள்ளி வைக்கப் போர்க்கோலம் பூண்டனர்; பிரசித்திப் பெற்ற பிரெஞ்சுப் புரட்சியை துவக்கினர். புரட்சியின் ஆரம்பக் காலத்தில் கொடூரமான கொள்ளைகளும் கொலைகளும் அனுமதிக்கப்படவில்லை. மன்னனுக்கெதிராக மக்கள் செய்த புரட்சி, ரத்தம் சிந்தாத ஒரு புரட்சி எனக் கருதி இங்கிலாந்து மக்கள் தங்கள் ஆதரவை, பிரெஞ்சு மக்களுக்கு நல்கினர். ஆனால் வெகு விரைவில் பிரெஞ்சுப் புரட்சியின் பாதை ரத்தக் கடலை நோக்கிச் சென்றது. எனவே இங்கிலாந்து மக்களும் ரத்தத் தடாகத்தில் நீச்சல் பழக நினைக்கும் பிரெஞ்சு மக்களுக்கு தங்களது எதிர்ப்பைத் தெரிவித்து மன்னனுக்கு ஆதரவாக மார்தட்டினர். பிரெஞ்சுப் புரட்சியின் ஆரம்பக் காலத்திலேயே, "இந்தப் புரட்சி மனித குலத்திற்கு ஒரு மாபெரும் வைரி. சரித்திரத்தின் ஒரு பக்கம் சவக்காடாக மாறிவிடும் இரத்தச் சேற்றினால் தங்கள் முகத்தை கழுவிக்கொள்ள பிரெஞ்சு மக்கள் துடிதுடிப்பர் எனவே இங்கிலாந்து மக்கள் இந்தப் புரட்சிக்கு ஆதரவு தரக்கூடாது" என எடுத்துரைத்தான் எட்மண்ட் பர்க் என்ற இங்கிலாந்து தேசத்தை சேர்ந்த மாபெரும் சொற்பொழிவாளன். பேச்சாளன் பர்க் பிரெஞ்சுப் புரட்சியின் எதிர்காலத்தை அற்புதமாகக் கணக்கிட்டு தன்னுடைய "பிரெஞ்சுப் புரட்சியின் பிரதிபலிப்புக்கள்" என்ற நூலில் 1790-ம் ஆண்டு எடுத்துரைத்தான். அரசியல் அறிஞன் பர்க் தன்னுடைய அரசியல் கருத்துக்களை எந்த நூலின் வாயிலாகவும் எடுத்துரைக்கவில்லை. அவனுடைய அரசியல் கருத்துக்கள் பெரும்பாலும் அவனுடைய பேச்சுக்களிலிருந்தும் கடிதங்களிலிருந்தும் எடுக்கப்பட்டிருக்கின்றன.

பர்க் தன்னுடைய அரசியல் கருத்துக்களுக்கு மதம் என்கிற முலாம் பூசினாலும் அவனுடைய ஒரு சில கருத்துக்களை இங்கிலாந்து மக்கள் பெரிதும் போற்றுகின்றனர். மனிதனுடைய இயற்கை உரிமைகளை பர்க் மறுக்கிறான். சுதந்திரம், சமத்துவம் ஆகியவைகள் இயற்கையினால் மனிதனுக்கு கொடுக்கப்பட்ட உரிமைகள். நாம் இந்த உலகில் உயிர்வாழ்வதற்கு உரிமை இருக்கிறது. இதுவும் இயற்கையினால் கொடுக்கப்பட்டது. ஆனால் சமத்துவம் சுதந்திரம் போன்ற இந்த மனிதனின் தலையாய உரிமைகளை பர்க் முக்கியமானதாக எடுத்துக் கொள்ளவில்லை. சட்டத்திற்குட்பட்ட உரிமைகளைத்தான் பர்க் அங்கீகரிக்கிறான். ஒரு நாட்டினுடைய சட்ட திட்டங்களுக்கு அந்த உரிமைகள் எதிராக இருந்தால் அந்த உரிமைகளை மனிதன் ஏற்றுக்கொள்ளத் தேவையில்லை. எனவே சட்டங்கள் அந்த உரிமைகளை மனிதனுக்கு அளித்தால், அவை சமூகத்தினரால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்பதே பர்க்கின் வாதம். உரிமையைப் பற்றி மனிதன் குரல் எழுப்பும்பொழுது அந்த உரிமை நேர்மையின் அடிப்படையில், நீதியின் அடிப்படையில் நியாயத்தின் அடிப்படையில் எழுப்பப்படுகிறதா என்பதைப் பகுத்தறிவால் ஆராய்ந்து உரிமைக்கு மதிப்பு கொடுத்தல் வேண்டும் என்கிறான். ஆனால் அரசியல் அறிஞர்களின் வரிசையில் இடம் பெறுகிற பர்க் பழைமையின் காதலன் புதுமையின் வைரி. பழைய பண்பாட்டிற்கும் பழக்க வழக்கங்களுக்கும் எப்பொழுதுமே மிகுந்த மதிப்புக் கொடுப்பவர்கள் ஆங்கிலேயர்கள். அதைப்போல் பர்க் புதுமையை எப்பொழுதுமே வெறுக்கிறான் பர்க் சமுதாயத்தில் ஒரு சில மாற்றங்களைத்தான் விரும்புகிறானே தவிர, புரட்சிகரமான மாறுதல்களை விரும்பவேயில்லை. எனவே தான் சுதந்திரத்தைப்பற்றிப்பேசும்பொழுது "அதிகமான சுதந்திரம் சமுதாயத்திற்கு கேடு பயப்பன. சுதந்திரம் ஓர் ஒழுங்கின்கீழ் கட்டுப்படுத்தப் பட்டிருக்க வேண்டும்" என்று கூறுகிறான். புதுமைக் கருத்துக்களுக்கு என்றுமே எதிரியாக விளங்கி பழைமையின் கோட்டையாக விளங்குகிறார். இங்கிலாந்தின் அரசியல் அமைப்பு முறையை வானளாவப் புகழ்கிறான். ஒரு நாட்டில் புரட்சிகரமான மாற்றங்கள் அடிக்கடி ஏற்பட்டுக்கொண்டிருந்தால் அந்த நாடு நிம்மதியாக வாழமுடியாது; அவை அழிவை நோக்கி இழுத்துச் செல்லும்; எனவே மாற்றம் தேவையில்லை என்கிறான். பழமை விரும்பியான பர்க் பாமர மக்கள் அரசியலில் பங்கெடுத்துக்கொள்வதை பகிரங்கமாகவே கண்டிக்கிறான். 'மக்கள் குரலே மகேசன் குரல்" போன்ற நல்லவற்றை எல்லாம் எதிர்க்கிறான். பாமரர்களும் படிக்காதவர்களும் அரசியலில் தலையிடுவதினால் ஒழுங்கான ஆட்சி முறை தடைப்படுகிறது என்பது அவனது எண்ணம். எல்லோரும் சமம் என்கின்ற உன்னதக் கருத்தையும் மறுத்து, "நாட்டை ஆளுவதற்கென்றே திறமை படைத்த ஒரு சிலர் பிறக்கின்றனர்; ஆகவே ஆள்பவனுக்கும் ஆளப்படுகின்றவர்களுக்கும் இடையே ஒரு மாபெரும் இடைவெளி இருக்கின்றது" என்று கூறி மன்னனுக்கு ஆதரவாகப் பேசுகிறான். மன்னனும் மாடோட்டுபவனும் ஒரு நாளும் சமமாக முடியாது என்று கூறி பிரெஞ்சுப் புரட்சியின் பயனாக உலகிற்கு கிடைத்த உன்னத ஒளி முத்துக்களான புரட்சி ஜனநாயகம், (Democracy) தேசியம், (Nationalism) சமத்துவம் போன்றவைகளை எதிர்த்துப் பழைமையின் சின்னமாகக் காட்சியளிக்கிறான் பர்க். 1790-ம் ஆண்டு பர்க்கின் 'பிரெஞ்சுப் புரட்சியின் பிரதிபலிப்புக்கள்' என்று புத்தகம் வெளி வந்து சுமார் 12 ஆண்டுகளுக்குப் பிறகு அதாவது 1802-ம் ஆண்டு பிரடெரிக் ஹீகல் என்ற ஜெர்மனிய அரசியல் அறிஞன் 'ஜெர்மனியின் அரசியல் அமைப்பு' என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டான். அந்தப் புத்தகத்தில் ஜெர்மனியின் அன்றைய நிலைமைகளைப் படம் பிடித்து அது நல்லதொரு நிலையை அடைவதற்கு வழி முறைகளையும் வகுத்திருந்தான். ஜெர்மன் நாடு உடைபட்டுச் சிதறுண்டு போனதற்குக் காரணம் அது பல பாகங்களாகப் பிரிந்து இருப்பதுதான் என்று கூறுகிறான். எனவே பிரிந்து கிடக்கும் பல பாகங்களை ஒன்றுபடுத்தி சிறந்ததொரு நாடாக ஜெர்மனியை ஆக்குவதற்கு ஜனநாயகமோ அல்லது மக்களாட்சி அமைப்பு முறையோ பயன்படாது. தனி மனிதன் ஒருவனின் திறமையினால் தான்–அதாவது வலிமை பொருந்திய ஒரு சர்வாதிகாரியின் கீழ்தான் ஜெர்மனியை ஒற்றுமைப்படுத்த முடியும் என்கிறான் ஹீகல். எனவேதான் அரசியல் சாணக்கியன் மாக்கியவல்லியையும் அவனது 'பிரின்ஸ்' என்ற நூலையும் புகழ்ந்து பாராட்டுகிறான். திராவிட நாட்டுப் பிரச்னையை எப்படித் தீர்ப்பது என்று மாண்டுபோன மாக்கியவல்லியையும், ஹீகலையும் கேட்டால் அவர்கள் இப்படித்தான் பதில் கூறுவார்கள்.

"திராவிட நாடு ஆந்திரம், கேரளம், கன்னடம், தமிழகம் ஆகிய நான்கு பிரதேசங்களையும் உள்ளடக்கியது. இந்த நான்கு பிரதேசத்தில் வாழுகின்ற மக்கள் திராவிடர் என்ற ஒரு இனத்தைச் சேர்ந்தவர்கள். தாய்மொழியாகிய தமிழ் மொழிக்குப் பிள்ளைகளாய்ப் பிறந்தவைதான் மலையாள, தெலுங்கு, கன்னட மொழிகள். இந்த நான்கு பிரதேசத்தையும் ஒரு கூட்டமைப்பின் கீழ் (Confederation) கொண்டு வந்து ஒற்றுமைப் படுத்தி ஒரு பலமுள்ள நாடாக உருவாக்க வேண்டும். ஆனால் ஜனநாயக முறைப்படி அதை அடைவதற்கு வெகு நாள் பிடிக்கும். எனவே ஒரு பலம் பொருந்திய யதேச்சதிகாரி தன்னுடைய படை பலத்தின் கீழ் அதைச் சீக்கிரம் அடைந்துவிடலாம். அப்படி அந்த சர்வாதிகாரி உருவாக்கிவிட்டானென்றால் அதற்குப் பிறகு திராவிட நாடு பல பிரிவிகளாக மறுபடியும் பிரிந்து போவது நடக்கக்கூடாத ஒன்று.

மாக்கியவல்லியும் ஹீகலும் யதேச்சதிகார ஆட்சி முறையை ஆதரிப்பதற்கு ஒரு அருமையான விளக்கம் தருகிறார்கள். மக்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், நேர்மையுள்ளவர்களாகவும், நீதியின் பால் நம்பிக்கை உள்ளவர்களாகவும், பொறாமை வஞ்சகம்போன்ற தீய சக்திகளுக்கு அடிமைப்படாதவர்களாகவும், படித்தவர்களாகவும் இருந்தால் அங்கு ஜனநாயக ஆட்சிமுறை சிறப்புள்ளதாக இருக்கும். ஜனநாயகம் வெற்றி பெறும். ஆனால் பொறாமை, போட்டி, சூது, சூழ்ச்சி, வஞ்சகம் போன்ற தீய சக்திகள் நடமாடுகின்ற ஒரு நாட்டில், தங்கள் உரிமைகளையும் ஓட்டுகளையும் காசுக்கு விற்கின்ற படிக்காத பாமரர்கள் நிரம்பிய ஒரு நாட்டில், நீதிக்கும் நேர்மைக்கும் ஒழுக்கத்திற்கும் புறம்பாக நடக்கும் மக்கள் வாழுகின்ற ஒரு நாட்டில் மறுபடியும் அவர்களை நல்ல நிலையில் கொண்டு வருவதற்கு ஜனநாயகம் பயன்படாது என்பதுதான் மாக்கியவல்லி ஹீகல் போன்றவர்கள் வாதம்.

நாட்டிற்காக எதையும் செய்யத் தயாராக இருக்கவேண்டும். நாடுதான் ஒரு மனிதனுக்குத் தாய்தந்தை குரு எல்லாம் என்கிறான் ஹீகல். தனி மனிதனின் உண்மையான சுதந்திரம் அவன் எந்த அளவு அந்த நாட்டுச் சட்டதிட்டங்களுக்கு பணிந்து நடக்கிறானோ அதைப் பொறுத்திருக்கிறது. ஆகவே சுதந்திரம் என்பது மனிதன், தான் நினைத்தபடி செய்வது அல்ல. ஒழுக்கம் நேர்மை முதலியவைகள் தனி மனிதனுக்கு அவசியம். ஆனால் ஒரு நாட்டிற்கு சர்வதேச அரசியல் அரங்கில் அவை அவசியமில்லை. ஒரு நாட்டிற்கும் மற்றொரு நாட்டிற்கும் ஏற்படுகிற சமாதான ஒப்பந்தம் நிரந்தரமானதல்ல. அந்த ஒப்பந்தங்கள் குறித்த காலத்திற்குள் மீறப்படும். ஏனென்றால் யுத்தம் ஒரு நாட்டிற்கு தேவையானது. ஒரு நாட்டில் அமைதி அளவுக்கு மீறி இருந்தால் உள்நாட்டுக் கலகம் ஏற்படும் என்று புது வியாக்யானம் கூறுகிறான் ஹீகல். தன்நாடு தன்நாடு என்று உணர்ச்சி பொங்கப் பேசும் ஹீகல், "கிரேக்க, ரோம சாம்ராஜ்யங்களில் ஒரு சிலர்தான் சுதந்திரத்தோடு வாழ்ந்தார்கள்; ஆனால் ஜெர்மனி நாட்டில் எல்லோரும் சுதந்திர வீரர்களாகக் காட்சியளிக்கிறார்கள்!" என்று நாட்டு வெறிபிடித்து கர்ஜிக்கிறான். தேசிய உணர்ச்சியை ஜெர்மன் மக்களுக்கு ஊட்டியவன் ஹீகல் என்றால் அது மிகையாகாது. எவ்வாறு 1694ல் பாரிஸில் பிறந்த வால்டேர் தன்னுடைய கட்டுரைகள், பாட்டுக்கள், நாடகங்கள் மூலமாக பிரான்ஸ் மக்களுக்கு புத்துணர்ச்சி ஊட்டினானோ அதைத்தான் ஹீகலும் ஜெர்மனியில் செய்தான். தன்னுடைய புத்தகத்தின் மூலம் தன்நாடு பொன்நாடு என்பதை உணர்வீர், உயிர் உடைமை அத்தனையும் நல்குவீர் என்று தேசிய உணர்ச்சியை ஊற்றி மக்கள் மனத்தில் இடம்பெற்றான் ஹீகல்.

-ஜோசப் பெஸ்கி, பி. ஏ.

ராஜா பார்லி
பிஸ்கட்ஸ்
குழந்தைகளுக்கு சிறந்த ஆகாரம்
மதுரை.

தற்காலத் தமிழ்க் கவிஞர்கள்

2. முடியரசன் - வாணிதாசன்

சிலரின் எண்ணங்கள் சற்று வேகமாகவும் கடுமையாகவும் தோற்றலாம்; ஆனால் அவை தரும் கருத்துக்கள் முற்றும் பயன் தருபவையேயாகும். காசுக்கு மாரடிக்கும் கூட்டத்தைக் கண்டாலும், பிறர் தேடியதைத் தனது என்று உரிமை கொண்டாடும் கூட்டத்தைக் கண்டாலும் கொதித்தெழுபவர் சிலர் அதுபோல, தமிழகத்தின் முடிசூடா மன்னரின் கவிதைகள். அக்குணமுடையோரைத் திருத்த முயலும் புதுமைக் குரல். முடியரசன் பள்ளித் தமிழாசிரியர் என்பதோடு தமிழ்த் தாயின் வளர்ப்பாசிரியர் எனில் தவறில்லை. அவர் பாடாத துறைகள் இல்லை-பேசாத பொருள் இல்லை-எண்ணாத கருத்து இல்லை என்றே துணியலாம்.

சந்தத்திற்கே சொந்தம் பாராட்டியவர்களின் இடையில், வெறுஞ் சந்தம் மட்டுமின்றி அங்கே கொஞ்சம் பொருளையும் கூட்டித் தருகிறார் முடியரசன்—

> "விரலாலே மலர் காட்டி
> விழியாலே எனை வாட்டி
> குரலாலே குழல் ஓட்டி
> குவிமுல்லை நகை காட்டி"—

அவள் ஆடினாள்; நடனம் ஆடினாள்; அங்குமிங்கும் ஓடி ஆடினாள்! பெண்ணழகைக் கண்டு பேதலித்தோர் பெரும்பான்மை; ஆனால் அவ்வழகை உண்டு, அதனைப் பிறர்க்கும் உண்டு என்று பாவிலே கொண்டு காட்டுபவர் கவிஞர் முடியரசன்.

இயற்கையின் எழிலை இவர் கூறும் பான்மைக்கு இவரே முதல் எனலாம். கதிரவனைக் கண்டு கமலம் மலர்தல் இயற்கை, அதனையே முடியரசன் கூறுகிறார்—

> "சுடர்விட்டுக் காட்டுகின்ற
> கதிரோன் தோன்றச்
> சுருக்கவிழ்ந்து சிரிக்குமுகத்
> தாமரைக்குள்"—

இயற்கையைப் பாடி வரும் போதே, நாட்டு மக்களின் வாழ்க்கையில் நாட்டம் சென்றுவிடுகிறது கவிஞருக்கு. பணியாக்கள் கொடுக்கும் பொருளுக்குப் பெறுகின்ற வட்டி முதலையும் விஞ்சுமாம்; அக்கொடியவர்கள் காலையிலே விடிந்தும் விடியாத பொழுதிலே கடன் கொடுத்தோர் வீட்டிலே காலடி வைத்துக் கசையடியைக் காட்டிப் பொருள் பெறுவராம். இதனை மனதில் எண்ணிய முடியரசனார் ஓர் உவமையைக் காட்டுகிறார். செடி, கொடி காய்த்துப் பெருகத் துணை செய்யும் வண்டு - தேனீக் கூட்டம் மலர்களில் உள்ள தேனை உறிஞ்சி முழுதும் உண்டுவிடுகின்றது என்கிறார்.

> "கடன்பட்ட மாந்தரிடம்
> வட்டி கேட்கக்
> கடைதோறும் புகுந்துவரும்
> கணக்கனைப்போல்
> இடம்விட்ட மலர்தோறும்
> சென்று தேனை
> இனிதுறிஞ்சி இசைபாடிச்
> செல்லும் தும்பி."

இயற்கையன்னையாம் கடலினைப் பாட வந்த கவிஞர், அதன் கொடுவாயில் கொண்டு சென்றவை கொடிது என்று நீதி கூறி நிற்கும் பான்மை உயர்வுடையது. சங்க இலக்கியங்கள் பல எங்களால் இழக்கப்பட்டது; உன்னால் கொள்ளப்பட்டதும் பல. இன்னும் ஏன் கரை நோக்கித் திரை காட்டுகிறாய்? என்று கவிஞர் கேட்கிறார்.

> 'பித்தரைப்போல் மூடரைப்போல்
> பதினெட்டாம் பெருக்கென்றும்
> ஆற்றி விட்டோம்,
> இத்தனையும் போதாமல்
> சங்கத்தில் இருந்தவற்றை
> நீயும் கொண்டாய்!
> கத்துதிரைப் படையெழுப்பி
> ஏனின்னும் கரைநோக்கி
> வருகின்றாய்நீ?"

மேலும்—

> "வங்கத்து வணிகத்தால்
> ஓங்குபுகார் வளமிக்க
> நகரை, எங்கள்
> சிங்கத்தை நிகர்பன்னீர்ச்
> செல்வத்தை செத்
> தொழியச் செய்தாய்!"

இவ்வாறெல்லாம் இன்னல் இழைக்கும் இயல்பினைக் கண்டேதான் சங்க கால மக்கள் உனக்கு பொருள் 'இரங்கல்' என்றனர் போலும் என்னுமிடம் தொல்காப்பியத்துள் கவிஞரின் ஈடுபாடு புலனாகின்றது.

> "நெய்தலெனப் பெயர்சூட்டி
> இரங்கல்என நினக்குரிமைப்
> பொருளும் தந்த
> செய்கையது நன்று நன்று!"

பல்பொருளைப் பாடினாலும் ஒவ்வொரு பொருளின் இடையிலும் நாடும்-மொழியும் ஓங்கவேண்டும் என்ற எண்ணம் கவிஞரின் இயல்பாய்த் தோன்றுகிறது. காதலியை விடத் துன்பம் தீர்க்கும் துணை தமிழே என்பதைக் கவிஞர் கூறுகிறார்.

> "காதலியே கேலியில்லை!
> தமிழ் சுவைத்தால்
> கவலை எலாம் பறக்குதடி!
> தளர்ச்சி நோயும் ஏதடி?"

பல்வகையாலும் உயர்வுடைய இனம் ஏன் பழைய உயர்வினை அடையவில்லை? என்ற எண்ணம் மேலிட, மேலிடக் கொதித்தெழும்பிக் குரல் எழுப்புகிறார் கவிஞர்.

> "வேற்று நாட்டார்
> கிழங்கென்றும் கீரைஎன்றும்
> எண்ணி நம்மைக்
> கீழாக்கி விட்ட இந்த
> நிலையோ மிக்கக்
> களங்காண வேண்டாமோ
> வீரம் மிக்க
> காளைகளே ஏனின்னும்
> பாழுறக்கம்?"

என்று நாட்டு மக்களை விழிப்புக் கொள்ள அழைக்கின்றார். முடியரசன் கவிதைகள் வெளிவர விருப்பவைகளை, நாட்டுமக்களுக்குத் தொகுத்து வைப்பவர்கள் நாட்டு விடுதலைக்கு வழிகாட்டுபவர்களாய்க் கருதப்படுவார் எனில் மிகையன்று.

★

எண்ணிய எண்ணமெல்லாம் தரணிக்குத்தான் என்று பரணி பாடி வருபவர் வாணிதாசன் பிற கவிஞரெல்லாம் பேசாத பகுதி எனும் உருவகத்தையே அடித்தளமாக அமைத்துப் பாடுபவர். கவிஞருக்குள்ள இயற்கை ஈடுபாடும் அதனோடியைந்து வரும் செயற்கைப்பொருள்களும் அவரது விரிந்த அறிவாற்றலை விளக்கி நிற்கின்றன. நாட்டு உரிமையில் வேட்கைமிகப் பெற்றதாலே சற்றுக் கடுமையாகவே குரல் கொடுக்கின்றார் காசுக்காக எழுத்தும் சந்தமும் இணைகிறதா என்று பார்த்துப் பாடல் எழுதி வயிறு பிழைக்கும் வரண்ட கூட்டத்தின் வைரி இவர். இவர் பாடல்களில் கருத்தோட்டம் கவினுறக் காட்சி அளிக்கும்.

கவிஞர் வாணிதாசன் இயற்கையைக் கண்டு எழுதுகின்ற ஓவியத்தைப் பாருங்கள். விளக்குதற்கு வேறு சொல், பொருள் வேண்டாம்.

> "வீட்டோரத்
> தோட்டத்து வேலியிலே
> தொங்கும் சுரைக்காய்கள்
> மீட்டாது மாட்டிவைத்த
> மெல்யாழாம்!"

சுரைக்காய் உருவமும் யாழின் உருவமும் கவிஞர் கைவண்ணத்தால் ஒலிக்கும் சிறப்புத்தான் என்னே!

கவிஞர் மக்களின் உணர்வறிந்தவர் என்பதை.

> "சாப்பாட்டைத் தேக்காதே!
> சண்டை அதன் விளைவாம்!
> பங்காக்கி உண்போம்!
> பசியேது பின்நாட்டில்?"

என்கிறார்.

நாடு நகரங்களில் தான் கொடுமையுள்ளம் படைத்தோர் ஊடாடுவர்; கிராமங்களில், சிற்றூர்களில் சிறப்பற்ற செயல்புரிவோர் வாழார் என்பதைக் கவிஞர் கூறுவதுடன், அங்கே மூங்கிலின் மூச்சே முத்தமிழாகும் என்கிறார்.

> "தாவி அலைந்து பசுமூங்கில்
> தமிழிசை பாடும் சிற்றூரில்
> காவல் கட்டுப் பாடில்லை;
> காசைப் பறிப்பார் அங்கில்லை."

ஆற்றுநீர் வருவதைக் கண்டு மகிழ்வோர் பலர் உண்டு; பலரிலும் பயன் பெறுவோர் சிலரேயாவர். காற்றின் கடிய அழுத்தத்தைத் தன் மடியில் கட்டிக்கொண்டு பெருஞ் சுழிப்பைச் சுழித்துச் செல்லும் ஆறு. இச்சுழிப்பை கவிஞர் ஒளிமிக்க கன்னம் என்கிறார். ஆனால் எம் கன்னம் இதனைக் கற்றிடல் முடியுமோ? என்கிறார்.

> "கற்றிடல் உண்டோதள தளத்த
> கன்னம் என்றன்
> சுழிப்பையெலாம்?"

கவிஞருக்குச் சங்க இலக்கிய ஈடுபாடு உண்டு என்பதைச் சில வரிகள் உறுதிப்படுத்தும் அவர் கூற்று முற்றும் உருவகமாய் அமையாமல் எளியோரும் அறியும் வகையில் அமைத்துள்ளமை சிறப்பாகும்.

> "குளத்தினிலே தாமரைகள்
> குறும்புப்பெண் கூட்டம்!
> குதித்துவரும் கார்எருமை
> பரிந்துவரும் தோழன்!"
> "வழியெல்லாம் புதுப்பூக்கள்
> மணம்வேட்கும் பெண்கள்!
> வண்டினங்கள் மலிவென்றே
> ஏய்க்கவரும் ஆண்கள்!"

கவிஞர் உலக இயற்கையில் நடைபெறும் செய்தியை நயம்படக் கூறும் முறை போற்றக்கூடியதாகும்.

கருநாகம் மிகவும் கொடியது குணத்தால்-பார்வைக்குப் பளபளப்பாய் மின்னும்; அதனைக் கண்ட கவிஞர் பெண்களின் சடை நெய்யிட்டுப் பின்னப் பெற்றிருப்பதால் ஒளி உமிழும் கருநாகம்போல் மின்னிடுகின்றது என்கிறார். மேலும் சுருண்டு பெட்டியுட்பட்ட கருநாகம் போற் கொண்டை முடித்தவள் போலும் என்கிறார்.

> "பெட்டியிலே சுருண்டகரும்
> பாம்பைப் போலப்
> பின்னிவிட்ட சடையவளுக்
> கிருக்கு மென்றும்."

காதல் வயப்பட்ட உள்ளங்கள் கட்டுப்படுதல் இல்லை; காதல் ஒரு சுவை தரும் கரும்பினை ஒத்தது. கரும்புகூட தின்னத் தின்ன தெகட்டும்; காதலோ-தெவிட்டாத ஓர் அருமையான சுவைப் பொருள். வண்டு தேன் நிறைந்த மலரில் ஒரு முறை நின்றிட்டால் மீண்டு வருதல் காண இயலாது; மென் விரலைச் சுவைக்கும் மழலைக்குத் தன் விரலே 'அமிழ்தம்' ஆகும். அவ்விரலினை எடுத்தால் குரலினை எழுப்பும் குழந்தைச் செல்வம். அவ்வளவு சுவை அவ்விரல்! அதுபோல் 'காதல்' வயப்பட்டோர் மீளுதல் இல்லை என்பதைக் கவிஞர் கூறுகிறார்.

> "மீள்வதுண்டோ கருவண்டு
> மலரில் வீழ்ந்தால்
> மெல்விரலைச் சுவைத்திருக்கும்
> குழவிக் கென்றும்
> தாள்சோர்ந்து போவதுண்டோ?
> கண்ணும் கண்ணும்
> தம்முள்ளே பேசுவதை
> நானென்ன சொல்வேன்?"

தன்னைப் பெற்ற நாட்டின் வாழ்விற்கும், தன்னை உலகுக்குக் காட்டிய உயர் மொழியின் வளர்ச்சிக்கும் கவிஞர் காட்டும் செய்ந்நன்றி உயர்வுடையது. 'பெற்ற தாயினும், பிறந்த நாட்டினும் பெரிதன்றோ' பேசும் தாய் மொழி' என்பதைக் கவிஞர் உன்னியவர். தமிழுக்குத் தோன்றும் பகைவன் தாய்க்கு வரும் நோய்! அது எதுவாயினும் அறவே அழிப்பீர் என்பதை—

> "தமிழ்மொழி தொலைக்க வந்த
> இந்தியை வெட்டிச் சாய்க்கத்
> தமிழ்ப்புல வீர்காள்! ஏனோ
> தயங்குறீர்?"

-என்று வினவுகின்றார் வாணிதாசன்.

தமிழ்நாடு விடுதலை பெறவில்லையே-ஏன்? என்ற வினாவிற்குக் கவிஞர் விடை:

> "தமிழரில் ஒருசிலர்கள்
> 'சரிசரி' போடக் கண்டும்
> தமிழ்க்கொடு வானெடுக்கத்
> தயக்கமேன்?"

—என்று தோள் தட்டும் வேல்மறவர் கூட்டத்தீரே! விழி அயர்ந்திருக்காதீர்! வாளெடுத்தாயினும் வால் பிடிக்கும் வன்கணாளரை வதைப்பீர்! என்று எழுச்சிக்குரல் எழுப்புகிறார்.

வாணிதாசன் தமிழர்க்கு விடுதலை உணர்ச்சியை எழுப்பும் இயக்கத்தின் விடிவெள்ளி.

முடியரசன் தமிழ் இலக்கிய உலகின் முடிசூடா மன்னர்.

விடிவெள்ளியின் ஒளி விளங்கித் தோன்றத் தொடங்கி விட்டது; உதயசூரியன் எழுந்து விட்டான்-முடிசூடா வேந்தர் முரசு கேட்கின்றது-இனி விரைவில் நம் நாடு நமக்கே என்பது உறுதி!

-இராம. இராமநாதன்,
பி. ஏ. (ஆனர்ஸ்.)

மருளும் மான்!

இந்தியக் கம்யூனிஸ்ட்களின் சீன பக்தியையும் அடிமைப் புத்தியையும் விளக்கிய நேரத்தில் திபேத் நாட்டுத் தலைவர் தலைலாமா சீனக் கம்யூனிஸ்ட்களின் கட்டுக் காவல்களையெல்லாம் கடந்து இந்திய எல்லைக்குள் வந்துவிட்டதாகச் செய்தி தெரிவிக்கப்பட்டது. ஏப்ரல் திங்கள் பதினெட்டாம் நாள் காலை 7-40க்கு தலாய்லாமாவும் அவருடன்வந்துள்ள 20 எண்ணிக்கையுள்ள அவரது குடும்பத்தினரும் பின் தொடர்ந்தோரும், இமயமலைச் சாரலில் அஸ்ஸாம் எல்லையோரத்தில் நேருவின் பிரதிநிதியாலும் அஸ்ஸாம் மந்திரிகளாலும் வரவேற்கப்பட்டனர். சீனக் கம்யூனிஸ்ட்களின் கடுமையான துப்பாக்கித் தாக்குதலுக்குத் தப்பிப் பிழைத்த இவர்களின் வருகையை எதிர் நோக்கி அஸ்ஸாம் பகுதிப் பொதுமக்களும், சர்க்கார் அதிகாரிகளும், உலகத்தின் பல பகுதிகளிலேயிருந்து வந்திருந்த 50-க்கும் மேற்பட்ட செய்தித்தாள்களின் நிருபர்களும் காத்து நின்றுர்கள். தங்கட்குப் புகலிடம் தந்த இந்திய சர்க்காருக்கு தலாய்லாமா நன்றி தெரிவித்துக்கொண்டார். பின்னர் அனைவரும் டெஸ்பூர் நகர் நோக்கிப் பயணப்பட்டனர். வழி நெடுகலிலும் லாமாவின் குழுவினர் வரவேற்கப்பட்டனர். அங்கே பொதுக்கூட்டத்தில் பேசியபோது தலாய்லாமா தான் தப்பி வந்த நிலையை விளக்கினர். வரவேற்புக்கும்பாராட்டுக்கும்வணக்கத்தைக் கூறினர். இந்திய சர்க்காரின் திரைப்படத் துறையினர் இந்தச் செய்திகளையெல்லாம் சென்ற இரண்டு கிழமைகளாகத் துணைக் கண்டத்தின் பல பகுதிகளிலே உள்ள மக்களுக்கெல்லாம் தெரிவித்துள்ளனர். இருபத்திமூன்று வயது நிரம்பிய தலாய்லாமா உலகத்தின் அனுதாபத்தைப் பெறுவதற்கு உரியவராகிருர். காரணம் சில வெறியர்களின் இரும்புப் பிடியிலே சிக்காமல் தப்பிப் பிழைத்திருப்பதால்! இவ்வளவு குறைந்த வயதுடைய ஒரு நபரின் பிரச்னை உலகப் பிரச்னையாகியது இதுதான் முதல் தடவையாகுமெனப் பலரும் கருதுகின்றனர். தலாய்லாமா கலகக்காரர்களால் கடத்திச் செல்லப்பட்டார் என்ற நவசீனத்தின் பெரும் பொய்யை "அவரது" டெஸ்பூர் அறிக்கை மிகச் சிறந்த முறையில் மறுத்துள்ளது. 'அதன் சுருக்கம் "தலாய்லாமா லாசாவையும் திபேத்தையும் விட்டு தன் விருப்பம்போல் வெளியேறி இந்தியாவை அடைந்திருக்கிருர். திபேத்திய மக்கள் சீன நாட்டு 'ஹான்' இன மக்களுக்கு முற்றிலும் வேறுபட்டவர்கள். இருந்தாலும் சீன ஆதிக்கம் வலுக்கட்டாயமாகப் புகுத்தப்பட்டுள்ளது. தனித்து சுதந்திரமாக இயங்குவதற்கு திபேத்திய மக்கள் விரும்புகிருர்கள். 1951-ம் ஆண்டு ஒப்பந்தப்படி, திபேத்தின் அரசியல் உரிமைகள் சீன சர்க்காருக்குத் தரப்பட்டிருந்தாலும் திபேத்தின் ஊர் விவகாரங்களையெல்லாம் தன்னிச்சையாகத் தீர்த்துக்கொள்ளவும் சீன சர்க்கார் சம்மதம் தந்துள்ளது. தலாய்லாமா ஒப்பந்தப்படி நடந்துகொண்டாலும் சீன சர்க்கார் தன் தலையீட்டுக் கொள்கையை நிறுத்தவில்லை. சீனர்களின் ஆதிக்க வெறியை எதிர்த்து சுதந்திர எழுச்சிக்குத் துணையாக நின்ற திபேத் நாட்டவரை சீனப் படையினர் பெரும் எண்ணிக்கையில் நாசம் செய்துவிட்டனர். லாமாக்களும் மதகுருக்களும் திபேத்திலிருந்து கடத்திச் செல்லப்பட்டு சீனநாட்டின் பல பகுதிகளில் பாதைகள் அமைக்கும் வேலைகளில் அமர்த்தப்பட்டுள்ளனர். அவர்களெல்லாம் அடிமைகளாகவே நடத்தப்பட்டு திபேத்நாட்டின் மதஉணர்ச்சியைப் புண்படுத்தியுள்ளனர்"

இந்த அறிக்கை வெளியிடப்பட்ட உடனேயே கம்யூனிஸ்ட்களின் இதயத்திலே பெரும் அடி விழுந்தது. அவர்கள் சொன்ன பொய்யுரைகளையெல்லாம் லாமாவின் அறிக்கை திட்டமாக மறுத்துக் காட்டியது. தப்பிப் பிழைத்த லாமா சீனக் கம்யூனிஸ்ட்களிடம் சிக்கிக்கொள்ளவில்லையே எனக் கவலைப்பட்டுக் கொண்டிருந்த இந்தியக் கம்யூனிஸ்ட்கள் லாமாவின் வருகையைக் கவனிக்காதவர்கள் போல் இருந்துவிட்டனர். பீகிங் நகரத்து 'பீபிள்ஸ் டெய்லி' என்ற பத்திரிகை டெஸ்பூரில் வெளியிட்டது தலாய் லாமாவின் சொந்த அறிக்கை அல்ல.

வலைப்பட்ட புறா

'அவரது பெயராலே ஏகாதிபத்திய வாதிகளும் இந்திய மண்ணாசைக்காரர்களும் சேர்ந்து தயாரித்தது. மிகவும் மோசமாக அந்த அறிக்கை ஆரம்பத்திலிருந்து கடைசிவரை நிறையப் பொய்களைக் கொண்டதாகும்' என்று குறிப்பிட்டது. இந்திய சர்க்காரின் முடிவுப்படி தலாய்லாமாவும் அவரது குழுவினரும் முசௌரி நகரத்து பிர்லா மாளிகையில் தங்கியுள்ளனர். அங்கே சென்றதும் சீனப் பத்திரிகைகளின் அவதூறைக் கண்டித்தும் தலாய்லாமா மீண்டுமோர் அறிக்கை வெளியிட்டார். 'தான் எவருடைய கட்டாயத்தினுலும் அறிக்கை தயாரிக்கவில்லையென்றும் அவை தன்னுடைய சொந்தக் கருத்துக்களே யென்றும்' தெரிவித்துக் கொண்டார். ஆனுல் தலாய்லாமாவின் செய்திகளை கம்யூனிஸ்ட்கள் எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ளவில்லை என்பதற்கு, சீனப் பார்லிமெண்டில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் ஏதுவாக இருக்கின்றன. 25-4 59 'ஜனசக்தி' இதழில் வெளிவந்துள்ள செய்தியைக் கீழே தருகிறேன். "இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ளவர்கள் திபேத்தின் கழிசடைகளாகும். சீன தேசிய மக்கள் காங்கிரசில் பேசிய பல பிரதிநிதிகளும் திபேத்திய கலகத்தின் ஆதரவாளர்களையும், அன்னியப் பிற்போக்காளர்களான ஏகாதிபத்தியவாதிகளையும் கண்டனம் செய்தனர். இந்திய விஸ்தரிப்புவாதிகளை சீனத்தின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடவேண்டாமென எச்சரிக்கை செய்தனர். திபேத்தியக் கலகக்காரர்களுக்கு ஆதரவு அளிப்பதின் மூலம் இந்திய-சீன நல்லுறவுக்குப் பெரிய பாதகம் உண்டுபண்ணுகின்றனர். இந்தியாவுக்கு ஓடிப்போன சில திபேத்திய மேல்தட்டுப் பிற்போக்காளர்கள் திபேத்நாட்டின் கழிசடைகள் என்பதை இந்தியர்கள் உணர்வார்கள்"-என்றெல்லாம் பலரும் பேசியிருக்கிருர்கள். இந்தியக் கம்யூனிஸ்ட்களும் மிகமிக பக்தி மனப்பான்மையுடன் சீனத்துச் செய்திகளையெல்லாம் வரவேற்றுள்ளனர். திபேத் மக்களைத் தென்கிழக்கு லோகாப் பகுதிகளில் வேட்டையாடிக் குவிப்பதையும் நவசீனச் செய்தி நிலையங்கள் களிப்புடன் தெரிவிக்க ஜனசக்திப் பத்திரிகையாளர்கள் தங்கட்கே உரிய வார்த்தைகளில் தெரிவித்து மகிழ்கின்றனர்.

இந்தியப் பார்லிமெண்டில் பிரதமர் நேரு தலாய்லாமாவுக்குத் தஞ்சமளிக்கும் செய்தியைத் தெரிவித்த நேரத்தில் எல்லா உறுப்பினர்களும் வரவேற்றனர். ஆனுல் கம்யூனிஸ்ட்கள்மட்டும் ஊமைகளாகிவிட்டனர். கம்யூனிஸ்ட் கட்சியின் சிந்திக்கும் முறைகள் செயல்படும் வகைகள் இந்தியாவின் நன்மைக்குஎதிரானவை என்று நேரு குறிப்பிட்டார். இதற்காக வெகு விரைவிலே தண்டிக்கப்பட இருக்கும் கட்சியின் செயலாளர் அஜய்கோஷ் லட்சுமணபுரி பொதுக்கூட்டத்தில் மிகவும் வருத்தப்பட்டுக் கொண்டாராம்! தலாய்லாமாவுக்குத் தஞ்சம் அளித்த இந்திய சர்க்காரை மண்ணாசைக்காரர்கள் என்றும் பிற்போக்கு வாதிகள் என்றும் குறிப்பிடுவதை அஜய்கோஷ் போன்ற சீன நாட்டு ஏஜண்டுகள் ஏற்றுக்கொள்கிருர்கள் என்றுல், இந்திய உபகண்டமெங்கும் சிதறிக் கிடக்கும் கம்யூனிஸ்ட்களும் வரவேற்கிருர்கள் என்றுல்; ஜனசக்தி முத்தையாக்கள் தலாய்லாமா கலகக்காரர்களால் இந்தியாவுக்குத் தூக்கி வரப்பட்டார் என்று சொல்கிருர்கள் என்றுல், இவர்கள் இந்தியாவைக் காட்டிக் கொடுக்கும் சிந்தனை வழியில்தான் செல்கிருர்கள் என்று நேரு கூறுவதிலே தவறென்ன? பிரதமர் என்ற முறையிலே நேரு தலாய்லாமாவை ஏப்ரல் 24 தேதியில் முசௌரியல் சந்தித்தார். இரண்டு மணி நேரத்திற்கும் அதிகமாக அவருடன் உரையாடினர். திபேத் கலவர விவரங்களையும் குண்டு வீச்சுக்குப் பிறகு மார்ச் 15-ம் நாள் லாமா தன் குடும்பத்தினருடன் லாஸாவைவிட்டு வெளியேறிய செய்திகளையும்தெரிந்து கொண்டார். பத்திரிகை நிருபர்களிடையே நேரு பேசுகையில் பல செய்திகளை விளக்கினர். தலாய்லாமா சுதந்திரமாக இருக்க அனுமதிக்கப்படுவார் என்றும் இந்திய மக்கள் அவருக்கு அதிகமான தொல்லைகள் தரக்கூடாதென்றும் கேட்டுக்கொண்டார். பஞ்சன்லாமா வந்து, சந்திக்கலாம்; பிரச்னைகளை-திபேத்திய சிக்கல்களைத் தீர்த்துக் கொள்ளலாம் என்றும் குறிப்பிட்டார். பீகிங் நகரத்து "டாடுங்போ" என்ற பத்திரிகை திபேத்தை 'இந்தியாவுக்குக் கீழ்பட்ட ஒரு ராஜ்யமாக்குவதற்காக இந்தியர்கள் சூழ்ச்சி செய்து வருகிருர்கள். திபேத்தியர்கள் சீனர்கள் அல்ல என்று கூறுவதே அதற்குச் சான்றுகும்-நேரு-லாமா சந்திப்பு கூர்மையாகக் கவனம் செலுத்தப்பட வேண்டியதாகும், என்றெல்லாம் தன்னுடைய கருத்தை வெளியிட்டது. நேருவின் சந்திப்பிற்குப் பிறகு நவசீனத்தின் செய்தி நிலையம் தலாய்லாமா ஒன்றும் இன்றும் மாறுபட்டுச் செயல்படுவதாகவும் இந்திய மண்ணாசைக்காரர்கள் அதனைப் பயன்படுத்துவதாகவும் நேரு இதனைப் புரிந்துகொள்ள வேண்டுமென்றும் நினைவூட்டியது; சுயபுத்தியுள்ளவர்களாக அடிக்கடித் தங்களைப்பற்றித் தெரிவித்துக்கொள்கிற தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களின் பத்திரிகையான 'ஜனசக்தி'யும் தன் விசுவாசத் தன்மையுடன் இந்தச் செய்திகளை வெளியிட்டது.

இந்தியக் கம்யூனிஸ்ட்களின் கம்யூனிச அறிவுக்கு ஆசான்க இருக்கும் சௌஎன்லாய் திபேத்தியக் கலவரக்காரர்கள் சிலர் என்றும் சீனத்தின் அடிமைகள் பலர் என்றும் பேசினுர். அங்கே சுதந்திர எழுச்சியில்லையென்றுல் சீனராணுவத் தலைவர் ஜெனரல் பூசுங் "விரைவில் கலகக்காரர்கள் போரிடுவதை நிறுத்தாவிட்டால் அழிய நேரிடுமென்று" எச்சரிக்கத் தேவையில்லை! திபேத்திய மக்களுக்குச் சேவை செய்வதே சீன சர்க்காரின் கொள்கைகள் என்று பறைசாற்றுவோர், "கலகக்காரர்கள் இந்தியாவுக்கு ஓடினுல் அது கண்மூடித்தனமான வழி. பெரும் பகுதிகள் சீனராணுவத்தின் வசம் வந்துவிட்டன. ராணுவம் எதிர்ப்போரை ஒழித்துக்கட்டி வருகிறது சரணடைவோர் மன்னிக்கப்படுவார்கள். சீன அதிகாரிகளுக்கு உதவுவோருக்குச் சன்மானம் தரப்படும். அடிமையாவோருக்கு அவமதிப்பு இருக்காது. கருணை காட்டப்படும். மன்னிப்பு வேண்டாதோர் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள்" என்ற சேனைத்தலைவரின் பேச்சையும் நன்ருகப் புரிந்துகொள்ளவேண்டும். இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லையென்ருல் சீன ராணுவத்தலைவருக்குப் பாராட்டு மொழிகள் அனுப்பலாம்! திபேத்திய மக்களுக்கு அனுதாபம் காட்டுவோரெல்லாம் இந்திய மண்ணாசைக்காரர்கள் எனச் சித்தரிக்கப்படுகிருர்கள். இந்த பெயருக்குள்ளே அடைபட்டிருப்பவர்களைக் குறிப்பிட்டுக் காட்ட சீனத்துக் கம்யூனிஸ்ட் தலைவர்களும், பல பத்திரிகைகளும், இந்தியாவிலே உள்ள அவர்களின் ஐந்தாம் படையினரும் இன்றுவரையிலும் தயாராகவில்லை! தலாய்லாமாவுக்கு அடைக்கலம் தந்து பீகிங் நகரத்து ஆதிக்க வெறியர்களின் ஆசைகளிலே மண் போட்டிருக்கும் நேருவையும், இந்திய சர்க்காரையும் நேரடியாகக் கண்டிக்கத் தைரியமில்லாத கோழைகள் 'இந்திய மண்ணாசைக்காரர்கள்' என்று பொதுவாகப் பேசுகிருர்கள்! பீகிங் நகரத்து உதவிமேயர் வாங்குன்றுங் என்ற பேர்வழி ஒருபடி முன்னதாகச் சென்று அந்நியப்பிற்போக்காளருக்கு உதவாமலிருக்கும்படி இந்திய அதிகாரிகளுக்கு நினைவூட்டினுராம். பீகிங்கிலிருந்து டில்லி அதிகாரிகளுக்கு வருகிற ஆணையை சென்னை நகரத்து ஏஜெண்ட். ஜனசக்திக்காரர்கள் மிகத் துணிவுடன் தெரிவிக்கிருர்கள்! ஆனுல் இன்னும் இந்திய-சீனத்து நட்புறவு நிலைத்துள்ளதாம்! இந்திய சர்க்காரை எச்சரிப்பதும் அதிகாரிகளுக்கு நினைவூட்டுவதும் நட்புக்கு ஏற்ற செயலா? வட நாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்குத்தான் தடித்த தோல் என்றுல் தமிழ்நாட்டுக் காம்ரேடுகளாவது கொஞ்சம் உணர்ச்சிபெறக் கூடாதா?

இந்தியப் பார்லிமெண்டில் ஏப்ரல் 27-ம் நாள் பிரதமர் நேருதான் தலாய்லாமாவை சந்தித்துப் பேசிய செய்திகளை வெளியிட்டார். சீனப் பார்லிமெண்டில் இந்தியாவைப்பற்றிய சீனத் தலைவர்களின் பேச்சுக்களை வேதனையோடு கண்டித்தார். ''சீனாவிலுள்ள பொறுப்புள்ள நபர்களால் இந்தியாவிற்கு எதிராகச் செய்யப்பட்டுள்ள விமர்சனங்களின் தொனியையும் குற்றச்சாட்டுக்களையும் கண்டு மிகவும் மனம் வருத்தம் அடைகிறேன். உண்மையையும் ஒழுங்கு முறையையும்பற்றிக் கவலைப்படாமல் அவர்கள் கெடுபிடிப் போருக்கு ஆயத்தம் செய்யும் வகையில் பேசியிருக்கிறார்கள். தேசிய மக்கள் காங்கிரசில் கூறப்பட்ட முற்றிலும் தகாத குற்றச் சாட்டுக்கள் வருந்தத்தக்கவை என்பதை சீன சர்க்காருக்கு அறிவித்துள்ளோம். திபேத் மக்களின் பால் நமக்கு அனுதாபம் உண்டு. அவர்களின் நிலையைக் கண்டு துயரமடைகிறோம். சீன சர்க்கார் விவேகத்தைக் கடைப்பிடித்து, திபேத்துக்கு எதிராகத் தங்கள் பெரிய வலிமையைப் பயன்படுத்தாமல் அவர்களின் வாக்குறுதிப்படி நடந்துகொள்வார்கள் என்றும் நம்புகிறோம்'' பண்டிதநேருவின் இந்தக் கருத்துக்களைக் கேலி செய்யும் வகையில், சீனர்களின் ஆதிக்க வெறித் தன்மையை வெளிப்படுத்தும்தன்மையில் ஹாங்காங் பத்திரிகை சீன சர்க்காரின் அதிகார பூர்வமான ஏடு ''குவாங்மிங் டெய்லி''-''சீன தேசிய மக்கள் காங்கிரசின் உறுப்பினர்களின் பேச்சுக்களிலிருந்தும், சீன மக்கள் அரசியல் ஆலோசனை மாநாட்டின் தேசியக் கமிட்டி உறுப்பினர்களின் பேச்சுக்களிலிருந்தும், சீனாவின் சகல தேசிய இனங்களைச் சேர்ந்த மக்களுடைய ஆத்திரம் மிகுந்த கண்டனங்களிலிருந்தும் சீன மக்கள் ஒன்றுபட்டு இந்திய மண்ணாசைக்காரர்களை எதிர்க்கிறார்கள் என்பது உறுதியாகிறது'' என்றெல்லாம்? ஆத்திரமூட்டுபவர்களுக்கு உறுதியான, பலமான பதிலடி''

வஞ்சிக்கும் வேடன்

என்ற தலைப்பில் வெளியிட்ட ஒரு கட்டுரையில் குறிப்பிட்டிருக்கிறது. இந்தியக் கம்யூனிஸ்ட்களின் சீனப் பத்திரிகைகளின வார்த்தைகளைத் தான் வரவேற்கிறார்கள் வாழ்த்துக் கூறிப் பரப்புகிறார்கள். தலாய்லாமாவிற்கு புகலிடம் தந்துள்ள இந்திய சர்க்கார் இங்குள்ள இதர அரசியல் கட்சிகளின், ஏவலுக்கு அடங்கவில்லை. தன் கடமையைச் செய்து வருகிறது. ஆனால் சீனர்கள், அங்கேயுள்ள கம்யூனிஸ்ட்கள், அரசியல் கட்சிகள் குறிப்பாக பிரஜா சோஷலிஸ்ட் கட்சி செய்துள்ள விமர்சனங்களையும் அசோக்மேத்தா-கிருபாளினி மசானி போன்றோரின் பேச்சுக்களையும் மண்ணாசைக்காரர்களின் அவதூறுகள் என்று சித்தரிக்கின்றன. இதனை அடிப்படையாக வைத்து இந்திய சர்க்காரின் பணிவான வேண்டுகோள், அடக்கமானபேச்சுக்களை அறிக்கைகளையெல்லாம் அவர்கள் ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்தியக் கம்யூனிஸ்ட்களாவது இதனைத் தங்களுடைய பீகிங் நகரத்துச் சீமான்களுக்குத் தெரிவிக்கிறார்களா என்றால் அதற்குச் சம்மதமில்லை! எஜமானர்களை எதிர்க்கும் துணிவு அடிமைகளுக்குச் சுலபத்தில் வருவதில்லை!

இந்தியப் பிரதமரின் பேச்சுக்களை சீனக்கம்யூனிஸ்ட்கள் கண்டிப்பதைப் போலவேதான் இந்தியக்கம்யூனிஸ்ட்களும் கணக்கிடுகிறார்கள். அகில இந்தியாவிலும் இருக்கின்ற கம்யூனிஸ்ட்கள் தமிழ்நாடு கமிட்டி உறுப்பினர் வி. பி. சிண்டன் என்பவர் திபேத் பிரச்னையில் என்ன சொல்கிறார் என்று ஏங்கித் தவித்ததைப் போலவும் வேண்டிக் கேட்டுக் கொண்டதைப்போலவும் எண்ணிக் கொண்டார். உடனே ''திபேத்தில் நடந்தது சுதந்திர எழுச்சியா?''- என்ற கேள்வியுடன் ஒருகட்டுரையை எழுதியிருக்கிறார். பிரதமர் நேருவின் புன்னகைக்காகக் காத்து நிற்கும் கம்யூனிஸ்ட்களில் ஒருவராக இருக்கின்ற சிண்டன் நேருவின் பேச்சை ஏற்றுக்கொள்ள மறுக்கிறார். கம்யூனிஸ்ட்கள் காட்டாத காரணங்களைக் கூறியிருந்தால் அதனை ஊன்றிக் கவனித்திருக்கலாம். ஆனால் அந்தப் பேரறிஞர் காலிம்பாங் கலகக்காரர்களின் தங்குமிடம் என்று மதிப்பிட்டு அசோக்மேத்தா போன்றோரின் பேச்சுக்களையும் ஆதாரமாகக் காட்டி நேருவின் கருத்துக்களைக் கண்டித்திருக்கிறார். ஆனால் சீனப் பார்லிமெண்ட் கூட்டத்தில் ஏப்ரல் 22-ம் நாள் பஞ்சன்லாமா பேசிய பேச்சுக்கள், மாசேதுங்கும் சௌ என்லாயும் கைதட்டி வரவேற்ற செயல்கள், 'பீகிங் டெய்லி' போன்ற பத்திரிகைகளின் தூற்றல்கள், ராணுவத்தலைவரின் திமிரான கட்டளைகள் இவைகளைப் பற்றியெல்லாம் எதுவும் எழுதாமல் ''நேரு திபேத் கலகக்கும்பலைப் பற்றிய தவறான மதிப்பீட்டின் காரணமாகத் திபேத்தியப் பிற்போக்காளர்களின் ஆதரவாளராகக் காட்சியளிக்கிறார். சீன சர்க்கார் கூறுவதைநேருதவறாகப்புரிந்து கொண்டுவிட்டார். தவறான மனப் போக்குதான் இதற்குக் காரணம்'' இந்த ரகத்தில் கருத்துக்களைக் குவித்துள்ளார். பிரஜா சோசலிஸ்ட் கட்சியினர் அமெரிக்க எஜமானர்கள் சொல்படி செயல்படுவதாகவும் தெரிவித்துள்ளார்! இந்திய சர்க்காரை சீனசர்க்கார் கண்டிக்கவில்லையாம். அசோக்மேத்தாவையும் மசானியையும் தான் மண்ணாசைக்காரர்கள்

என்று குறிப்பிடுகிறார்களாம்! சிண்டன் தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களுக்காக வளைந்தும் குழைந்தும் எழுதியிருந்தால் நமக்குக் கவலையில்லை. ஆனால் அவர் இந்திய - சீன நட்புறவுக்காகப் பேசியிருக்கிறார். ரஸாக்கர்கள், நாசர்கள் இவர்களையெல்லாம் துணைக்கழைத்து வைத்துக்கொண்டு சீனசர்க்காருக்குத் தன் துதிபாடும் நன்றியைத் தெரிவிக்கிறார். பீகிங் எஜமானர்களுக்குப் பாதபூஜைகள் நடத்துவதில் நமக்கு நட்டமில்லை. ஆனால் திபேத் பற்றி அனுதாபம் கூறுவோரெல்லாம் மண்ணாசைக்காரர்கள் என்று கூறுவது தான் அவரது சுயசிந்தனையைச் சந்தேகிக்கச் செய்கிறது. சில ஆண்டுகளுக்கு முன்னால் 'பேரிகை' ஆசிரியர் எஸ். எஸ். மாரிசாமி சிண்டனைப் பற்றிச் சொல்லும்போது ''படுமுட்டாள்தனமாக விவாதிப்பதில் வல்லவர்'' என்று குறிப்பிட்டுள்ளார். அந்த அருமையான வாசகம் உண்மையென்று நிரூபிக்கிறார் என்றே உணர நேரிடுகிறது.

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் தங்களது இதயத்து ஆசைகளை வெளிப்படையாகத் தெரிவிக்க முடியாமல் திணறிக்கொண்டுள்ளார்கள். உதட்டளவில்தான் அவர்கள் இந்திய சீன நட்புறவைப்பற்றி நினைக்கிறார்கள். இந்திய சர்க்காரை அமெரிக்க முதலாளிகளின். பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வாதிகளின் கைப்பொம்மை என்று சித்தரிக்க நெஞ்சம் துடிக்கிறது. ஆனால் தாங்கள் வெளிநாட்டுச் சீனாவின் ஏஜண்டுகள் - ஐந்தாம் படைகள் என்பது விரைவில் வெளிப்பட்டுவிடுமே என்ற அச்சத்தினால் பதுங்கிப் பதுங்கிப் பேசுகிறார்கள். நேரு உண்மையைத் திரித்துக் கூறுவதாக பீகிங், ஷாங்காய் மக்கள் கருதுகிறார்களாம். 'திபேத் துரோகிகளை நேருவின் அறிக்கை பகிரங்கமாக ஆதரிக்கிறது. சீன உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவோரின் விஷமத்தனமான நடவடிக்கைகளுக்கு நேருவின் அறிக்கை நேரடியாக ஆதரவு தருவது பஞ்சசீலக் கொள்கைகளுக்குப் புறம்பானதாகும்'' இப்படியும் பேசினார்களாம்-ஜனசக்தி ஆசிரியர் தெரிவிக்கிறார்! திபேத் விவகாரத்தால் சீன நட்பு குலையவில்லையென்றால், நேருவின் கருத்துக்களை, இந்திய சர்க்காரின் நடவடிக்கைகளைக் கம்யூனிஸ்ட்கள் ஏன் வரவேற்கவில்லை - பாராட்டவில்லை? ''சீன இந்திய நட்பை விரும்பும் நேரு திபேத்தில் சீன ஆதிபத்திய உரிமையைத் தடுப்பது ஏன்''— என்று 'பீபிள்ஸ் டெய்லி' அதிகாரக் குரலில் கேட்கிறது! 'ஜன சக்தி'யும் ஆமாம் அதுதான் சரியென்று தலையாட்டுகிறது! நேருவின் நட்புக்குத் தவமிருக்கும் கம்யூனிஸ்ட்களின் தலைவர் பூபேஷ்குப்தா என்பவர் மே, நான்காம் தேதி இந்திய மேல் சபையில் பேசும்போது ''பேரறிஞரும் சிறந்த வரலாற்று ஆசிரியருமான பிரதமர் நேருவைப் போன்றவர்கள் திபேத் கலகத்தை ஒரு தேசிய எழுச்சியெனக் கூறுவது கண்டு வெகுவாக வருந்துகிறேன்'' என்று குறிப்பிட்டுள்ளார். சீனப் பத்திரிகைகள் நேருவை திரிபுவாதக்காரர் என்று சொல்கின்றன-பூபேஷ் குப்தா நேருவை ஒரு மிகப் பெரிய பேரறிஞர் என்கிறார். ஏன் அவர் சீனப் பத்திரிகைகளைக் கண்டிக்கவில்லை. நேருவின் வேதனையான நிலையை உணருவதாகவும் சீனப் பத்திரிகைகளின் அறிக்கைகளையும் வரவேற்க வருந்துவதாகவும் சொல்லியிருக்கிறார்! தமிழ்நாட்டுச் சிண்டன் இந்திய விஸ்தரிப்புக்காரர்கள் அசோக் மேத்தாவும் மசானியும் தான் என்கிறார்! சிண்டனின் தலைவர் பூபேஷ் குப்தா ''இந்தியாவைப் பற்றிய சீன அறிக்கையில் ''விஸ்தரிப்புக்காரர்'' (Expansionist) என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. அச்சொல் எதைக் குறிக்கிறது என்பது எனக்குத் தெரியாது பி. சோ,வினரைப் பொறுத்தவரையில் இச்சொல் அதிகப்படுத்திக் கூறுவதாகும். ஏனெனில் பி. சோ. வின் 'விஸ்தரிப்பு'ச் சக்தி மிகவும் குறைந்த அளவுடையதுதான்''என்று மிகத் தெளிவாகக் கூறியுள்ளார்!

தமிழ் நாட்டுக் கம்யூனிஸ்ட்களே! உங்களின் வணக்கத்துக்குரிய பூபேஷ் குப்தா உங்களையே காட்டிக் கொடுப்பதைக் கவனியுங்கள்!

இந்தியாவில் தஞ்சம் புகுந்துள்ள தலாய்லாமாவும் அவரது குழுவினரும் திபேத்திலிருந்து விரட்டியடிக்கப்பட்ட கழிசடைகள் பிற்போக்கு வாதிகள். நேருவின் சர்க்கார் அவர்களை ஆதரிப்பது சீன இந்திய நட்புக்கு முறிவுண்டாக்கும் என்றெல்லாம் சீனக் கம்யூனிஸ்ட்களும் இந்தியக் கம்யூனிஸ்ட்களும் பேசி வருகின்ற நேரத்தில் பூபேஸ்குப்தா ''சர்வ தேசச் சட்டப்படி தலாய்லாமாவுக்கு எல்லாவித வரவேற்பு உபசாரங்களும் அளிக்கப்பட வேண்டியதுதான். நீதியின் கரங்களிலிருந்து தப்பியோடி வந்த ஒருவருக்கு அரசியல் அபயம் அளிக்கப்பட்டுள்ளது வரவேற்கத்தக்கதுதான்'' என்று தன் இதயம் திறந்து பேசியிருக்கிறார்.

கடலரசன்

சிண்டன்களும் ஜீவானந்தங்களும், மற்ற கம்யூனிஸ்ட்களும் என்ன பதில் சொல்கிறார்கள்? இந்திய அரசியல் கட்சிகளின் கருத்துக்களையும் வைத்து, சர்க்காரின் ஆதரவினையும் சேர்த்து நவசீனத்தின் செய்திநிலையம் இந்திய மண்ணாசைக்காரர்களின்விஸ்தரிப்புத் திட்டம் என்று குற்றம் சாட்டுகிறது. ஆனால் மக்கள் சபையில் பேசிய கம்யூனிஸ்ட் தலைவரும் பிரபல 5000 ரூபாய்த் தோழருமான எஸ். ஏ. டாங்கே ''பிரதம மந்திரி நேருவுக்கு மண்ணாசை இருப்பதாக யாரும் குற்றம் சாட்டவில்லை என்று தான், நானும் எங்கள் கட்சியும் நினைக்கிறோம். இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையை கம்யூனிஸ்ட் கட்சி ஆதரித்து நிற்கிறது. இந்தியாவுக்கும் சீனாவுக்கும் நட்புறவில் வெடிப்புகள் ஏற்பட்டுள்ளதை சரிப்படுத்துவதற்கு இருநாடுகளும் முயலவேண்டும். சீனா கூறிய குற்றச்சாட்டுக்களைப்பற்றி பிரதம மந்திரி மனம் வருந்துவதை என்னால் நன்கு புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால் எந்தமட்டத்திலும் திபேத் பிரச்னையைப் பற்றி விவாதிப்பதற்கு எந்தக் காரணமும் கிடையாது''-என்றெல்லாம் சீனத்துச் சீமான்களுக்குப் பக்கமேளம் தட்டித் தன் விசுவாசத்தைக் காட்டிக்கொண்டுள்ளார். இந்திய சர்க்காரின் வெளிநாட்டுக் கொள்கையை ஆதரிப்பதாக பேசுகின்ற டாங்கே ''சீனமக்களின் உணர்ச்சிகளைப் பிரதமர் நேரு புரிந்துகொள்ளட்டும்'' என்று எச்சரிப்பது சரியா? ''தலாய்லாமாவுக்கும் திபேத்திய அகதிகளுக்கும் புகலிடமும் உபசாரமும் அளிப்பது பற்றி எனது மனம் கோணவில்லை'' என்கிறார் டாங்கே. ஆனால் அவருடைய பிரதம கூட்டுச் செயலாளர் அஜய்கோஷ் என்பவர் ''திபேத் அகதிகள் பிரச்னை சிக்கலானதென்றும், நேசநாடான சீனாவுக்கு மிக ஆடம்பரமான வரவேற்புகள் அளிப்பது தேவையற்றதென்றும்'' மே ஆறும் தேதி புதுடில்லிப் பத்திரிகையாளரிடையே பேசிய நேரத்தில் இந்திய சர்க்காருக்கு எச்சரிக்கை தந்துள்ளார். ஜீவானந்தம் யார் பக்கம்-டாங்கே பக்கமா-அஜய் பக்கத்திலா-பதில் தேவை?

கம்யூனிஸ்ட் தலைவர்கள் டாங்கேயும் பூபேஷ் குப்தாவும் பேசிய பிறகு இரு சபைகளிலும் விவாதத்திற்கு

வாடிடும் சமாதானத் தூதர்

பதில் கூறிய நேரு "திபேத் பிரச்ஜீனக்கு போர்க்குணமிக்க பிரசங்கங்களினுலோ அல்லது போர்க்குணமான முறைகஜீளக் கடைப்பிடிப்பதன் மூலமாகவோ பரிகாரம் காண முடியாது. சீனத் தஜீலவர்கள் பயமுறுத்தல்களினுலும் காரசாரமான நிந்தஜீனகளினுலும் இந்தியாவைப் பயப்படுத்தும் நிஜீலபெறச் செய்து விடலாம் என்று நிஜீனத்தால் அது தவருனதாகும்" என்று விளக்கினுர். கம்யூனிஸ்ட்கள் கேட்டுக்கொண்டு தான் இருந்தார்கள்-மறுக்கவில்ஜீல! பிரஜா சோசலிஸ்ட் கட்சியும், ஜனசங்கமும் எந்தெந்தக் காரணங்கஜீள வைத்துத் திபேத் விவகாரத்தைக் கவனிக்கின்றனவோ அதே காரணங்கஜீளயும் அவற்றிலிருந்து எழுகின்ற சிக்கல்கஜீளயும் இஜீணத்து வைத்தே நேருவும் பேசுகிறுர்-கருத்துக்கஜீளத் தெரிவிக்கிறுர். டாங்கே சொன்னது போலவே பிரச்ஜீனகஜீளப் பேசித் தீர்க்கவே விருப்பம் காட்டுகிறுர். ஜே. பி. கிருபளானி இதஜீன முன்னதாகவே கூறினுர். சீனக் கம்யூனிஸ்ட்களின் பேச்சுக்கஜீளயெல்லாம் எடுத்துக் காட்டி இந்தியக் கம்யூனிஸ்ட்கஜீள பேசுங்கள்; சவாலுக்குப் பதிலளியுங்கள் என்று கேட்டார். அவருக்கு விடை தரமுடியாத கம்யூனிஸ்ட்களிலே ஒருவராக இருக்கும் ஏ. எஸ். கே. அய்யங்கார் என்பவர் கிருபளானியை ஜெர்மன் நாட்டு கொயபல்ஸுக்கு ஒப்பிட்டுள்ளார்! பிரஜாசோஷலிஸ்ட்கள் திபேத்திய விவகாரத்தைப் பொது விவகாரமாக எண்ணியிருந்தாலும் இந்த அய்யங்கார்த் தோழர் அவர்கஜீளச் சரித்திரப் புரட்டர்கள் என்று சாடுகிறுர். டாங்கே கிருபளானியின் கட்சியினர் மண்ணுசைக்காரர்கள் என்று நான் சொல்லமாட்டேன் என்றுர். ஆனுல் அய்யங்கார் சொல்கிறுர் பி. சோ. கட்சியினர் அமெரிக்காவின் அடிவருடும் மண்ணுசைக்காரர்கள்தான் என்று சீன சர்க்கார் நன்கு புரிந்து கொண்டிருப்பதாகப் புலம்பித் தவித்துள்ளார்! பீகிங் நகரத்து எஜமானர்களிடம் ஏ. எஸ். கே. அய்யங்கார்-பிரஜாசோஷலிஸ்ட்களும் குறிப்பாக கிருபளானியும் அசோக்மேத்தாவும், மண்ணுசைக்காரர்கள் என்ற அறிக்கையை திட்டமான குற்றச்சாட்டுகளுடன் வாங்கித் தரமுடியுமா? பூபேஷ் குப்தா 'விஸ்தரிப்புக்காரர்களுக்கு' விளக்கம் தெரியவில்ஜீலயென்னும்போது 'அய்யங்கார் காம்ரேட்' எப்படி பிரஜா சோஷலிஸ்ட்கஜீளக் காட்டிக் கொடுக்கிறுர்! சீனக் குற்றச்சாட்டுகஜீளக் கம்யூனிஸ்ட் கட்சியெனும் கடிவாளத்தைக் கழற்றி வைத்துவிட்டு, அய்யங்கார்கள் எண்ணவேண்டும். அதன் பிறகு எழுதவேண்டும். அதன் பிறகு ராமமூர்த்தி போன்ற அய்யர்த் தோழர்கள் பொதுக்கூட்டங்களிலே பேசவேண்டும்! சீனக் கம்யூனிஸ்ட்களின் தோழமை முகமூடி கிழிக்கப்பட்டதைக் கண்டு வாலறுந்த நரிகஜீளப் போல் ஊஜீளயிடுகின்றவர்கள் இந்தியக் கம்யூனிஸ்ட்களே என்பதை அய்யங்கார் உணரட்டும்!

இந்தியப் பிரதமர் நேருவின் நல்லெண்ணத்தில் கம்யூனிஸ்ட்களுக்கு நம்பிக்கையில்ஜீல என்பதை வெளிப்படுத்தும் வகையில் "திபேத்தும் நேருவின் தத்துவமும்" என்ற தஜீலப்பிட்டு சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் பத்திரிகையான 'பீபிள்ஸ் டெய்லி' ஒரு கட்டுரை வெளியிட்டுள்ளது. திபேத் கலகக்காரர்களிடம் நேரு அனுதாபம் காட்டுவது வேறு பலருடைய நிர்ப்பந்தத்தினுல் நடைபெற்றுள்ளதாம்! கலகத்தைத் தூண்டியவர்கள் அமெரிக்க ராஜாங்க இலாகா, பிரிட்டிஷ் ஏகாதிபத்திய வெறியர்கள், தென் கொரிய சிங்மன்ரீ, பார்மோசா சியாங்கேஷேக், தென் வியட்னும் நிகோடின்டீம், இந்திய பிற்போக்குக் கட்சிகளான பிரஜா சோசலிஸ்ட் கட்சி, ஜன சங்கம் ஆகியவர்களோடு தொடர்பு கொண்டவர்களாம்! சீனக் கம்யூனிஸ்ட்களும், இந்தியக் கம்யூனிஸ்ட்களும் சொல்லாத காரணங்கஜீள 'பீபிள்ஸ் டெய்லி' தெரிவித்துள்ளது. உடனே அதனுடைய ரிப்போர்ட்டர்-ஜனசக்தி-வெளியிட்டுள்ளது. நேருவின் செயல்கள் அத்தஜீனயும் தவறு என்கிற அந்தக் கட்டுரையை சீன மக்களின் பதில்-பிரதமர்நேருவுக்குத் தரப்பட்டது என்றும் விளம்பரப்படுத்தியுள்ளது. நேருவின் கருத்துக்களில் முரண்பாடுகளும் தவறுகளும் நிறைய உள்ளனவாம்! பூபேஷ் குப்தா எந்த நேருவை பேரறிஞர் என்றுரோ அதே நேருவின் பேச்சை ஒன்றுக்கொன்று தொடர்பற்ற குழப்பம் நிறைந்துள்ளது; நேருவின் அறிக்கையில் தெளிவில்ஜீல என்று கேலி செய்கிறது சீனப் பத்திரிகை. அதுதான் சரியென்கிறுர்கள் ஜனசக்திக்காரர்கள். ஆனுல் இவர்கஜீள சீனத்து உளவாளிகள் என்று சொல்லக்கூடாதாம்! இந்திய மண்ணுசைக்காரர்கள் என்று ஒரு தனிப் பிரிவையே உருவாக்கினுர்கள் கம்யூனிஸ்ட்கள்! ஆனுல் சீனப்பத்திரிகை நேருவைப் பார்த்துக் கேட்கிறது. "நேற்றுத்தானே இந்தி-சீனி பாய் பாய் என்று முழக்கினீர்கள் அதற்குள் திபேத்தை காரணமாகக் கொண்டு சீனுவின் உள்விவகாரத்தில் தஜீலயிடவும் எப்படி முடிந்தது" என்பதாக! திபேத்தில் ராணுவத் தஜீலயீடில்ஜீலயாம். சுயாட்சி தந்துள்ளார்களாம். இந்தியாவைக் கண்டித்துப் பேச சீனக் கம்யூனிஸ்ட்களுக்கு எல்லாவிதமான உரிமையுண்டாம். இப்படியும் பிரதமர் நேருவுக்கு மிகக் கடுமையான பதிலடி தந்துள்ளார்கள். சீனர்கள் இந்திய சீன நட்புறவைப் பெரிதாக எண்ணியிருந்தால் நேருவின் பொறுமையைக் கேலி செய்து, அவரது முயற்சிகஜீள அரசியல் அறிவுக்கு எட்டாதது என எச்சரித்திருக்கமாட்டார்கள். இந்தியக் கம்யூனிஸ்ட்களும் பீகிங் பத்திரிகைச் செய்திகஜீளத் தந்து அதஜீனத் தான் தங்களுடைய பேச்சிற்குப் பக்கபலமாக வைத்துக்கொண்டுள்ளார்கள்! சொந்தப் புத்திதான் சோரம் போனதே!

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சியின் மத்திய கமிட்டி இந்திய சீன நட்புறவு பலப்படவும், பஞ்சசீலக் கோட்பாடுகஜீளக் கடைப்பிடிப்பதே பரிகாரம் என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளது. சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த சமாதான சகவாழ்வுக் கொள்கைகஜீள இம்மியும் பிசகாமல் அனுசரித்து இந்திய சீனசர்ச்சைகஜீளக் கைவிட வேண்டும் என்று தெரிவித்துள்ளது. திபேத் எழுச்சி தேசிய எழுச்சி அல்லவென்றும் அந்நியர் தூண்டுதலென்றும், இந்தியாவிலே சில கட்சிகள் துவேஷ மூட்டுகின்றன என்றும், சீன உள்நாட்டு விவகாரங்களில் இந்தியா தஜீலயிடக் கூடாதென்றும் குறிப்பிட்டுள்ளது. சீனுவின் நடவடிக்கைகள் இந்தியாவை ஒரு அந்நிய நாடாகவே மதித்துச் செய்யப்பட்டதாக இருக்கின்றன. சான்றுக நேருவின் அன்பழைப்பிற்குப் பதில் தந்த பஞ்சன் லாமா "திபேத் பிரச்சிஜீனயைப் பற்றிப் பேச இந்தியாவுக்கு வருமாறு நேரு என்ஜீன அழைக்கிறுர். அவருக்குப் பணிவுடன் சொல்லுகிறேன். திபேத் விவகாரம் திபேத் மண்ணிலும் சீன மண்ணிலும்தான் தீர்க்கப்பட வேண்டும். வேறு எந்த அந்நிய நாட்டு மண்ணிலும் தீர்க்கப்படமுடியாது. என்னுடைய வார்த்தைகளில் நியாயமில்ஜீல என்று நேரு கூறுவதற்கு எந்தவித ஆதாரமும் கிடையாது. இந்திய மண்ணுசை வெறியர்களின் செயஜீலக் கண்டித்தது சரிதான் என்பதை நேருவுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவில் புத்தமதம் இழிவாகக் கருதப்பட்டு தாழ்த்தப்பட்டுள்ளது. இது நேருவுக்குத் தெரியாதா? இந்திய அதிகாரிகளில் சிலர் நான் அங்கே சென்றிருந்தபோது என்ஜீனச் சரியான முறையில் கவனிக்கவில்ஜீல. எனவே என் தோள்மீது அதிகமான பொறுப்புகள் சுமத்தப்பட்டுள்ள இந்த நேரத்தில் இந்தியா போன்ற இடத்துக்கு வருவதற்கு எனக்கு வசதியில்ஜீல" இவ்வாறெல்லாம் பேசியிருக்கிறுர்! 21 வயது மட்டுமே நிரம்பியுள்ள இந்தப் பெரிய பையன் சீனர்களுக்கும் இந்தியாவுக்கும் உறவில் நெடுந்தூரம் விலகி நிற்கும் தன்மையை விளக்கிக் காட்டியிருக்கிறுர். "பஞ்சன்லாமாவின் பதில்" இந்தியக் கம்யூனிஸ்ட்களுக்குச் சரியெனப்படுகிறது. ஆனுல் தீர்மானம் மட்டும் இந்தியப் பிரதமரின் பேச்சை ஆதரிக்க முன் வருகிறது. பஞ்சன் லாமா சொல்வதையெல்லாம் கேட்டு நேரு வருந்துகிறுர். ஆனுல் கம்யூனிஸ்ட்கள் களிப்படைகிறுர்கள்! நேருவைக் குறைத்து மதிப்பிடுகிறுர் பஞ்சன்லாமா. அதஜீனயும் கம்யூனிஸ்ட்கள் வரவேற்கிறுர்கள்! நேருவைமறந்துவிட்டுப் "பிற்போக்குவாதிகளிடம்" தங்கள் கோபத்தைத் தெரிவித்துக்கொள்வதாகப் பேசிக் கொள்கிறுர்கள். இந்த இரட்டை நாக்குத் தோழர்கள் இன்னும் எத்தஜீன நாட்களுக்கு வெளியாரின் ஏவலுக்குக் காத்துக்கிடக்கும் இழிதன்மையில் இருக்கப்போகிறுர்களோ தெரியவில்ஜீல!

இந்தியக் கம்யூனிஸ்ட்கள் இந்தியாவிலேயிருக்கின்ற பிரஜா சோசலிஸ்ட்களும் ஜன சங்கத்தவரும்தான் நவசீனத்தை எதிர்த்து, துவேசப் பிரச்சாரம் செய்வதாகப் புகார் செய்கிறுர்கள் அடிமைத்தன்மைக்குத் தங்கள் புத்தியை கம்யூனிஸ்ட்கஜீளப்போல் பறிகொடுத்துவிடாதவர்கள் எல்லாம் நவசீனத்தின் நாச வேஜீலகஜீளக் கண்டித்து வருகிறுர்கள். கம்யூனிஸ்ட்கஜீளப் பல நேரங்களில் ஆதரிக்கும் 'பிளிஸ்ட்' பத்திரிகை ஏப்ரல் 25-ம் தேதி இதழில் "Open letter to Premier Chou en Lai" என்ற கட்டுரையில் சீன சர்க்காரின் நீதிக்கும் நேர்மைக்கும் புறம்பான செயல்கஜீளயும் பேச்சுகஜீளயும் அன்புடன் எடுத்துக் காட்டி கனிவுடன் கண்டித்திருக்கிறது. சீன சர்க்காருக்கு நல்லெண்ணம் இருக்குமானுல், இந்த நட்பைவிரும்புகிறேம்என்றுபேசுவது இதய பூர்வமான கருத்து என்றுல், ஏன் இந்திய எல்ஜீலப் பகுதிகஜீள சீனத்தின் பகுதிகளாகக் காட்டுவது தவறென்று உணரவில்ஜீல? அந்தப் படங்கள் கோமிண்டாங் சர்க்காரில் தயாரிக்கப்பட்டது என்ற சமாதானம் எத்தஜீன நாஜீளக்கு? அந்தத் தவறுகஜீளத் திருத்த கம்யூனிஸ்ட் சர்க்கார் எடுத்துக்கொண்ட முயற்சிகள் என்ன? திபேத் சிக்கஜீலத் தீர்க்க, திபேத்-சீனு-இந்தியா உள்ளிட்ட ஒரு முக்கூட்டு மாநாட்டுக்கு சீனப் பிரதமர் முன் வர வேண்டும்" என்று கூட ஒரு வேண்டுகோஜீளயும் விடுத்திருக்கிறது! திபேத்மீது சீனுவுக்கு ஆதிக்க நோக்கமும் வெறிபிடித்த அடக்குமுறை ஆட்சியும் இல்ஜீலயென்றுல் 'பிளிட்ஸ்' ஏடு சொல்லுவது போன்ற முக்கூட்டு மாநாட்டுக்குத் தயாரா? இந்தயோசஜீனயை தந்திருப்பது அமெரிக்க ஏஜெண்டல்ல! நாசர்-குருஷ்சேவ்-காசிம் ஆகியோரிடையே தூது சென்று இஜீணப்புப் பாலமாக மாறிக்கொண்டிருக்கும் காம்ரேட் கரஞ்சியாவை ஆசிரியராகக் கொண்டுள்ள பத்திரிகை 'பிளிட்ஸ்'தான், நேரு-தலாய் லாமா-சௌஎன்லாய் சந்திப்பு நடைபெற்று விவகாரம் நட்பு முறையிலே தீர்க்கப்படுவது உலகத்திற்கே புது வழிகாட்டுவதாகும் என்று நம்புகிறது! இந்தியக் கம்யூனிஸ்ட்கள் இதற்கென்ன சொல்லப் போகிறுர்கள்? கரஞ்சியாவை யாருடைய கைக் கூலியென்று தீர்ப்பளிக்க முடியும்? அண்மையில் நிகிடாவ் குருஷ்சேவைச்சந்தித்த 'சர்டிபிகேட்' அவரிடத்தில் இருக்கிறது! கம்யூனிஸ்ட் கல்யாணசுந்தரங்களுக்கும் சுப்பையாக்களுக்கும் சுந்தரய்யாக்களுக்கும் கிடைக்காத வாய்ப்பு கரஞ்சியாவுக்கு கிடைத்துள்ளது. இதுபற்றி 'பீபிள்ஸ் டெய்லி'யின் கருத்தைக் கடன் வாங்காமல் சொந்தக் கருத்தைக் கூற வேண்டும்!

இந்திய சீன சர்க்கார்களின் செயல்கஜீளயும், இந்தியக் கம்யூனிஸ்ட்களின் போக்கிஜீனயும் விவரிக்கும் செய்திகள் தரப்பட்டன. சீனக் கம்யூனிஸ்ட்களின் தன்மைகளுக்கு மிகவும் பணிந்து போய் பண்டிதர் நேருவும் அவரது சர்க்காரும் கடைப்பிடித்த முறைகள் முற்றிலும் சரியா, எந்த அளவுக்குத் தவறுகள் செய்துவிட்டார்கள் என்ற பகுதியிஜீனயும் பரிசீலித்தாக வேண்டும். ஒரு பெரிய உபகண்டத்தைக் கட்டியாளுவதாகப் பெருமையடித்து

— 10-ம் பக்கம் —

விற்பஜீனயாகிறது!

தில்ஜீல-வில்லாளன்
எம். ஏ., பி. எல்.
தீட்டிய

திரை

படிக்கவும், நடிக்கவும் இனிக்கும் ஓரங்க நாடகத் தொகுப்பு நூல் இது.

விஜீல ரூ. 1.

— விபரங்களுக்கு: —

பாரி நிஜீலயம்,
59, பிராட்வே :: சென்ஜீன - 1.



நூல் நயம்

பொதுவாழ்வில் பணியாற்றி, இலக்கியத்துப்
பொன்வீட்டில் இளைப்பாறப் புகுந்தகாலை
மதுக்கோப்பை கரத்தேந்திக் குடியன்காணும்
மாருத கனவுலகம் காட்சியாகும்!
சதுராடும் மங்கையரின் பாதத்தோடு
சரியாகச் சேர்ந்தாடும் சிலம்பின் ஓசை
கதகதப்பை வாலிபரின் உளத்தி லேற்றிக்
கலக்குதல்போல் இலக்கியமும் கலக்கும் நெஞ்சை!

தென்றலிலே தேன்மொழி.

ஆசிரியர்: **டாக்டர் மொ. அ. துரை அரங்கசாமி.**

தமிழின் இனிய சுவையையும் அழகிய அமைப்பையும் பறைசாற்றுவன, கவிக்கொட்டி முழக்குவன, நறவொழுகும் தீஞ்சுவைக் கனிகள் ஆகும். அவை சுவைப்பார்க்குப் பேரின்பமும் கற்பார்க்குப் பெருமகிழ்வும் தருவனவாகும். தாம் கற்றவற்றைத் தாமே சுவைக்காது, பிறரையும் சுவைக்க அழைக்கசம் பெரும்பணியில் உள்ள பேராசிரியப் பெருமக்கள் பல முறை நம்மையும் அழைப்பதுண்டு. அழைப்புக் கிடைக்கிறதே என்று நெருங்குகின்ற மக்கள், அச்சப்படும்படியாகச் சிலரது இடி முழக்கங்கள் அமைவது உண்டு. அந்த முறையைச் சற்று மாற்றிக்கொண்டுள்ளனர் பலர். இலக்கியம் யாருக்குப் பயன்பட வேண்டுமோ, அன்னூர்க்குப் புரியும் வகையில் அதைத் தர முன் வந்துள்ளனர் பலர். அவருள் ஒருவர் திரு. மொ. அ. துரை அரங்கசாமி ஆவார்.

அவ்வப்போது வானொலியில் தாம் பேசிய பேச்சுக்களைத் தொகுத்து, "**தென்றலிலே தேன்மொழி**" என்ற இந்நூலைத் தந்திருக்கிறார். தமிழின் மரபுகள் சிலவற்றையும், சில பாடல்களுக்கு விளக்கங்களையும், தமிழ்ப் புலவர் சிலரது வாழ்வுகளையும் விளக்கிப் பொழிந்த இப்பேச்சுக்கள் பயனுள்ளவை, எக்காலத்திற்கும். முன்னுரை எழுதி அதனுடன் நூலைத் தரும் பழக்கம் இக்காலத்தில் அருகி வருகிறது. அதை எழுத வேண்டிய அவசியத்தையும் அது வர வேண்டிய முறையையும் அழகாக விளக்கியிருக்கிறார். "இலக்கிய மரபுகளுள் பாயிரம்" என்ற பேச்சில். அத்தோடு, அம்முறைப்படி தன் நூலுக்குத்தக்க ஒரு முன்னுரையையும் எழுதியிருக்கிறார், அழகாக. வெண்பாவிற் புகழேந்தியார் பெற்றிருந்த சிறப்பையும் விளக்குகிறார். உரை நடையையும் சுட்டிக்காட்டியிருக்கிறார். மொத்தத்தில் இது தமிழ் இலக்கிய இலக்கணத்திற்கு நல்ல ஒரு முன்னுரை; பொன்முடி நூலகத்தினரின் அழகிய முதல் முயற்சி.

விலை ரூ. 2-50

கிடைக்குமிடம்: **பொன்முடி நூலகம்,**
260-B, சைனுபசார்ரோடு,
சென்னை—1.

★

காதல் நெஞ்சம்.

ஆசிரியர்: **வித்துவான் திரு. மாவண்ணு தேவராசன்**

இதுவும் இலக்கியச் சிந்தனைகளின் தொகுப்புதான். தான்பெற்ற கவி(னுறு) இன்பத்தை தமிழ்மக்கள் அனைவரும் பெற்று மகிழ அவர் வழங்கிய கவிதை விளக்கக் கொத்தே இது. நல்ல குறுந்தொகை, இவ்வல்ல பெருந்தகையார் விளக்கத்தால் அழகு பெறுகிறது. காதல் மனைவிக்குக் காதலன் விடுக்கும் மடல்கள் உருவில் கட்டுரைகள் உள்ளன. தமது விளக்கத்திற்கு அரணாக, வால்ட்டர்ஸ்காட், ஷேக்ஸ்பியர் ஆர்னல்டு போன்ற பல எழுத்தாளர்களின் பல்வகைக் கூற்றைத் துணையாகக் கொண்டிருக்கிறார்; நல்ல முயற்சி. குறுந்தொகை நல்ல இனிய நூல்; பெரிய களஞ்சியம். அதன் இனிமையை 147 பக்கங்களில் தந்த ஆசிரியர் மாவண்ணுதேவராசன் நம் பாராட்டுக்குரியவர். அன்றைய எண்ணங்களும் இன்றைய எண்ணங்களும் காதல் உலகைப் பொறுத்து ஒன்றே என விளக்கும் பான்மையால் சில இடங்களில் தன் திறமையைக் காட்டுகிறார். இது காதல் நெஞ்சம் மட்டுமல்ல; தமிழ்நெஞ்சமுங்கூட; நகைச்சுவை நெஞ்சமுங்கூட.

ஆசிரியரின் திறனுக்கு நன்றி; அழகிய அட்டைப்படத்துடன் வெளியிட்டோர் முயற்சிக்குப் பாராட்டு.

விலை ரூ. 2-00.

கிடைக்குமிடம்: **குமரய்யன் பதிப்பகம்,**
8, துளசிங்கம் சந்து,
சென்னை-1.

★

காதல் விழி.

ஆசிரியர்: **அழகரசன்.**

காதல் விழி ஒரு கவிதை நூல். காதல் விழி என்ற ஒரு சிறு காவியமும் வேறு சில பாடல்களும் சேர்ந்த ஒரு தொகுப்பு இது. ஆசிரியர் உணர்ச்சியைக் கொட்டிப் பாடுகின்றார். அங்கங்கே அழகின் கற்றைகள் ஒளிர்கின்றன; ஊடேடே உவமைகளும் வந்து போகின்றன. "அறிவுக்கே இடம் ஒதுக்கி அகன்ற நெற்றி" என்னும் இடம் சுவைப்பதற்குரியது. மொத்தத்தில், எங்கும் காதல்! காதல்! காதல்! இடையே அத்திபூத்தாற்போல், எங்கேயோ ஒரு பிள்ளை மதி தெரிந்தாற்போல், தமிழின் புகழொளியையும் பாடியிருக்கிறார்.

"என்றன் தமிழினிலே - ஏதும்
இல்லாத தேஇல்லை!
என்ற நிலைவந்தால்—அன்றே
என்தமிழ் பொன்தமிழாம்"

என்ற நமது ஆசையை அவரும் பிரதிபலிப்பதற்கு நன்றி! முன்னவர் மொழிகளையும் பொன்னாகக் கொள்தல் சில இடங்களில் நன்றாகத்தான் இருக்கும். ஆனால் ஒன்றிரண்டு சொற்களை மாற்றிப் புதியனபோல் காட்ட முனைதல் ஆசிரியரின் பிற கருத்துக்களை அழுத்திவிடும். எதிர்பாராத முத்தத்தில் நினைவில் கொள்ளத்தக்க வரிகளாய் பாரதிதாசன் அவர்கள் இறுதியில் அமைத்த அடிகளை "காதல் விழி"யின் கடைசி வரிகள் நினைவூட்டுகின்றன.

"கலைக்காக உயிரிழந்தான் சிற்பி! அன்னோன்
காதலுக்காய்க் கண்ணிழந்தாள் அழகுக்கன்னி!"

என்று அழகரசனுர் பாடியுள்ள வரிகளைத்தான் சொல்கிறேன்.

"அருகிலவள் இல்லைஎன்று புத்தகத்தை
அடுக்கிலிருந் தெடுத்துவைத்துப் படிக்கப்
பார்ப்பான்
பெருகிவரும் அவள்நினைவு பேயாய்ஆட்ட
பிரித்தஏடு பிரித்தபடி அமர்ந்திருப்பான்!
சரிஅவளும் அருகுவரப் படிப்போம்
என்னும்
தருணத்தில் அவள்வருவாள் அவளைப் பார்த்து
சிரிஎன்பான்; பேசென்பான்; தேன்தான் என்பான்!
தென்றலங்கு புத்தகத்தின் தாள்புரட்டும்!!"

என்ற அடிகளும் நினைவுக்கு வேலை கொடுக்கவில்லையா?

திறமையான சொற்களை அங்கங்கே ஆள்கிற தன்மை—பொருட் செறிவோடு ஆள்கின்ற திறமை-அழகரசனுர்க்கு வாய்த்திருக்கிறது. ஆனால் சில சொற்களை முறைப்படி எழுதாமை, குழப்பத்தைத் தருகிறது. ரகரம் மொழி முதல் எழுத்தாகாது. ரங்கனைச் சிலர் ரெங்கனுக்கினும் அரங்கன் என்றுதான் சொல்வர் மொழியுணர்ந்தோர். ரத்தத்தை "இரத்தம்" என்று எழுதி வந்தனர் தமிழில். ஆனால் எவரும் **ரெத்தம்** என்றெழுத நாம் கண்டதில்லை. ஆசிரியர் அழகரசனுரோ,

"ஐயோ' **ரெத்தம்** கொட்டுகின்ற விழிகளைத்தான் கண்டான்! நெஞ்சைக் கொத்து விழி ரெத்த விழி ஆனதேனோ?" என்கிறார் 103-ம் பக்கத்தில். இரத்த விழி, ரெத்த விழி ஆனதேனோ? எப்படியோ? கதைப் போக்கிற்கு இடையூறாக, இப்படித் தொடர்கள் வரலாமோ?

இத்துணையும் தந்த இதன் விலை மலிவுதான்.

விலை ரூ. 1-50.

விற்பனை உரிமை: **பாரி நிலையம்,**
சென்னை—1.

★

நகைச் சுவை விருந்து.

ஆசிரியர்: **வித்துவான் திரு. மாவண்ணு தேவராசன்.**

அன்றும் இன்றும் வெளியான நகைச் சுவைத் துணுக்குகளைக் கட்டுரை வடிவில் தந்துள்ளார் ஆசிரியர். முன்னோர் பலரின் வாழ்விலும் தம் வாழ்விலும் உதிர்ந்த துணுக்குகளைத் தொகுத்துத் தந்துள்ளார். பீர்பாலும் காளமேகமும் தெனாலிராமனும் ஆசிரியரும் பொழிந்த இச்சுவைத் துணுக்குகள், சிறுவர் படிப்பதற்கேற்றன. எதையும் இலக்கியக் கண்ணுடன் நோக்கும் ஆசிரியரின் திறம் வியத்தற்குரியதே!

விலை ரூ. 1-25.

வெளியிட்டோர்: **குமரய்யன் பதிப்பகம்,**
சென்னை—1.



நூலைப் பற்றி

'தணலில் தங்கம்' ஒரு குடும்பக் கதை. குடும்பத்திலே ஏற்பட்டுவிடும் 'கேடுபாடுகள்' அதனால் வந்துறும் 'அவதிகள்' இவைகளை எதிர்த்து நின்று பெறும், இறுதி வெற்றிகள் என்பனவைகளை எடுத்துக் காட்டுகிறது.

மா. கி. தசரதன்...நற்கருத்துக்களை **'தணலில் தங்கம்'** என்னும் இவ்வேட்டிலே காட்டி நம்மை மகிழ்வுறச் செய்கிறார்.

—**அறிஞர் அண்ணு.**

★

'தணலில் தங்கம்' என்னும் இத்தொடர் கதையில் பண்பு சிறப்புற அமைந்துள்ளது. வாழ்க்கைச் சிக்கலை எடுத்துக் காட்டுவதிலும், அவரவர் மனப்பான்மையைப் புலப்படுத்துவதிலும் இதன் ஆசிரியர் திரு. மா. கி. தசரதன் வெற்றி பெற்றுள்ளார்.

—**டாக்டர் மு. வ.**

வெண்ணிலா வெளியீடு,
விற்பனை உரிமை: "தென்றல்", சென்னை-6.
தேவையுள்ள விற்பனையாளர்கள் "தென்றல்" முகவரிக்கு எழுதுக.
தனிப்பிரதி வேண்டுவோர் தபால் செலவு சேர்த்து ரூ. 1-60 அனுப்பவேண்டும். விற்பனையாளருக்கு கழிவு 20%.

— 8 ம் பக்கத் தொடர்ச்சி —

உலகை ஏமாற்றிக்கொண்டு வரும் இந்திய சர்க்காரின் கையாலாகாத தனத்தை வெளிக் காட்டியுள்ளது திபேத் நாட்டு விவகாரம். 'கரண்ட்' ஆசிரியர் காரகா அவர்கள் "China Ready for Showdown with India"—"Nehru is our biggest disappointment" என்ற இரண்டு கட்டுரைகளிலும் இந்திய சர்க்காரின் தரங்கெட்ட பல தன்மைகளை விளக்கியுள்ளார். அந்தக் கருத்துக்களைக் காண்க: "நவசீன செய்தி நிலையம் (The New China News Agency) சோவியத் சர்க்காருக்கு "டாஸ்" இருப்பது போல சீன சர்க்காரின் அதிகாரபூர்வமான செய்தி நிலையமாகும். அந்தப் பத்திரிகை தலாய்லாமா நேரு சந்திப்பை வெளியிட்ட தன்மை மிகக் கொடூரம் வாய்ந்ததாகும். தலாய்லாமா ஒரு அந்நியருக்குப் பேட்டியளித்தார் என்று குறிப்பிட்டது! (Dalai Lama's statement to a "Foreigner") இந்த 'அந்நியர்' பதம் நேரடியாகவே நேருவைக் குறிப்பிடுவதாகும்! தலாய்லாமா தந்துள்ள அறிக்கையை முழுவதும் பொய்யுரைகள் நிரம்பியதென்றும் கணித்துள்ளது. இதன் பிறகும் நேரு சீனர்களுடன் நேசம் பாராட்டுவது வியப்பூட்டுவதாகவே உள்ளது. இரண்டு முக்கியமான விஷயங்கள் கவனிக்கத்தக்கவையாக இருக்கின்றன.

1. சீன சர்க்காரின் உறுதியான எதிர் நடவடிக்கைகள் இந்தியாவை எதிர்த்து.

2. சீனர்களை மதிப்பிடுவதில் பிரதமர் நேருவின் அளவுகடந்த அனுதாப உணர்ச்சிக்கான உண்மைக் காரணங்கள்.

இந்திய சர்க்காருக்கு தலாய்லாமா தப்பி வந்த விவரம் தெரியாதென்று சொன்னார். ஆனால் அதே சமயத்தில் திபேத்தில் நடைபெற்ற கம்பாக் கலவரத்திற்குத் தேவையான தரைப் படங்கள் இந்திய நகரமான காலிம்பாங் நகரத்தில தயாரிக்கப்பட்டன என்ற சீனத்தின் குற்றச்சாட்டையும் சரியான மறுமொழியுடன் கண்டிக்கவில்லை. திபேத் கலவரத்தைப்பற்றிய செய்திகளை லாசாவிலுள்ள கானசல் ஜெனரல் உடனடியாக டில்லிக்குத் தெரிவிக்காதது ஏன் என்பதையும் நேரு விசாரித்தாக வேண்டும். பத்திரிகைச் செய்திகளை யெல்லாம் நேரு மிகைப்படுத்தப்பட்டவையென்று சொல்லி ஒதுக்கித் தள்ளிவிட்டார்–உண்மையைத் தெரிய மறுத்துவிட்டார்!"

இலண்டன் நகரத்து 'டெய்லி டெலிகிராப்" என்ற பத்திரிகையின் நிருபரான பீட்டர்சன் என்ற நிருபரின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றுகூட ஆசைப்பட்டார். நேருவின் சமாதானப் பேச்சுக்களை காங்கிரஸ் கட்சியினர் ஏற்றுக்கொண்டாலும் உலகத்துச் சிந்தனையெல்லாம் பெற்றுள்ள மாசேதுங்கும் சௌஎன்லாயும் நேருவின் பரிதாப நிலையையும் செய்திகளைத் தெரிந்துகொள்ளும் அறிவுக் குறைவையும் நன்கு புரிந்துகொண்டனர். தலாய்லாமா இந்திய எல்லைக்குள் புகுந்துவிட்டார் என்ற செய்தியை நேரு தெரிவிப்பதற்கு முன்பாகவே சீன சர்க்கார் தெரிவித்தது. ஆனால் இந்தச் செய்தி டில்லியிலிருந்து வெளியிடப்படவில்லை என்றும் குறிப்பிட்டார். இந்தச் செய்தியை சீனர்கள் எப்படித் தெரிந்துகொண்டார்கள்? தலாய்லாமாவைக் கண்டுபிடிக்கும் பணியில் இந்திய எல்லையோரத்தில் பயன்படுத்தப்பட்ட கம்பியில்லாத் தந்திச் செய்திகளை சீனர்கள் ரகசியமாகக் களவாடியிருக்க வேண்டும். நேருவுக்கு முன்பாகத் தங்கட்குத் தெரியும் என்று சொன்னதோடல்லாமல் தலாய்லாமா இந்தியாவுக்குத் தப்பி வருவதற்கு இந்திய சர்க்காரே வசதி செய்து தந்திருப்பதாகவும் நம்பச் செய்துள்ளது. நேருவின் வெளிவிவகார இலாகா சரியானபடி செயல்படுவதில்லை என்பதும் இதனால் புலப்படுகிறது. காரகா சொல்லியிருக்கும் வாசகம் ("Nehru's External Affairs Ministry is perhaps the most ill informed Ministry in the World") உலகத்திலேயே மிகவும் பிற்போக்கான நிலையிலே இந்திய சர்க்காரின் வெளிவிவகார இலாகா இருப்பதுநேருவின் திறமைக்கும் புகழுக்கும் ஏற்றதல்ல! சீன நாட்டார் தங்களுக்குள்ள ராணுவ பலத்தினால் நேருவின் தர்க்க ரீதியான ஆய்வுரைகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இல்லை. இந்தியாவிலே உள்ள சீனக் கம்யூனிஸ்ட்களின் ஆதரவாளர்களின் "சீனி இந்தி பாய் பாய்! இந்தி சீனி பாய் பாய்" என்ற போலித் தத்துவம் இத்தனை சங்கடங்களையும் உண்டாக்கிவிட்டு, இந்திய சர்க்கார் சீனாவின் உள் விவகாரத்தில் தலையிடுவதாகவும் குற்றம் சாட்டக்கூடிய வாய்ப்பினைத் தந்துள்ளது. இந்திய சீன நட்புறவை சோவியத் ரஷ்யா பலப்படுத்த எண்ணுகிறது. ஏனெனில் கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையே சமரசம் ஏற்படுத்த ஒரு நாணயமான புரோக்கர் நேருதான் என்றும் முடிவு கட்டியுள்ளது. பீகிங் நேருவுக்குத் தன் பல்லைக் காட்டி இச்சகம் பேசுவதில்லை. இந்திரா காந்திக்கும் பயப்படத் தயாராக இல்லை நட்பை முறித்துக்கொண்டு பகை வளர்க்கவே முடிவு செய்துள்ளது.

நவசீனத்தின் செய்திநிலையம் நேருவின் மென்மைத் தன்மையை மலிவாக எடுத்துக்கொண்டு இந்தியாவை இழிவுபடுத்துவதற்கு இடமளித்தது. வெளிவிவகார இலாகாவின் லாயக்கற்ற தன்மைகளாகும்! சில தவறுகளினால் சீனப்படையினர் லாசாவிலிருந்து கல்கத்தாவையும் ஜெம்ஷெட்பூரையும் குண்டுவீசித் தாக்கும் வசதியைத் தந்துள்ளது. கம்யூனிச மனப்பான்மையுள்ள வி. கே. கிருஷ்ணமேனனிடத்தில் ராணுவ இலாகா இருப்பதுகூட இந்தியாவின் நடுநிலைமைக் கொள்கைக்குப் பாதகம் விளைவிப்பதாகும். அமெரிக்கத் தூதர் சக்ளாவிடம் திபேத்துக்குள் வந்துள்ள அகதிகளின் எண்ணிக்கையைக் கேட்டார்களாம் அங்கே உள்ள அங்கேரிய அகதிகள். சக்ளா புதுடில்லிக்கு செய்தி கேட்டபோது திபேத்திய அகதிகள் எவரும் இந்தியாவுக்குள் வரவில்லை என்று தெரிவிக்கப்பட்டதாம். அதனால் அங்கே நிதி திரட்டும் வேலைகள் தடைப்பட்டனவாம். திறமையான அமைச்சர் நேருவின் வெளி விவகார இலாகா ஏனிப்படித் தரக்குறைவாக இருக்கவேண்டும்? ஏறத்தாழ பதினையாயிரம் திபேத்திய அகதிகள் இந்தியஎல்லைக்குள்நுழைந்துள்ளனர். இவர்கள் அத்தனைபேரும் கம்பா கலவரக்காரர்களா? சிவாஜி பார்க்கில் பேசியபோது "இனியும் நாம் நவசீனத்தை நம்பக்கூடாது" என்று ஜெயப்பிரகாசர் குறிப்பிட்டார். அப்படியானால் நமது வெளிநாட்டுக் கொள்கையை முற்றிலும் மாற்றி புதிய உருவம் கொடுக்கப் பண்டித நேரு முன் வரவேண்டும்! சீனத்தின் செயல்களை நேரு அறிந்திருக்கிறார். ஆனால் உண்மையில் என்ன செய்வதென்று தெரியாமல் தத்தளிக்கிறார். இந்திய சர்க்காரின் துப்பாக்கிகள் இன்றைய தினம் பாகிஸ்தானை நோக்கித் திருப்பப்பட்டுள்ளன. ஆனால் திபேத் எல்லையோரத்தில் ஏற்பட்டுள்ள ஆபத்துக்களை தடுத்தாக வேண்டும் அதற்கான முயற்சிகளைப் பாராளுமன்றமும் இந்திய மக்களும் செய்தாகவேண்டும். தோழர் எச் வி. காமத் குறிப்பிட்டிருப்பதுபோல தலாய்லாமாவை பீகிங் நகரத்திற்கு அனுப்பினால் அவரும் ஒரு இம்ரே நாகியாக்கப்படுவார் என்பதில் சந்தேகமில்லை! நேருவின் சிந்தனைத் திறம் வேலை செய்யும் வேகக் குறைவில் இந்திய சீன நட்புறவைக் குலைக்க பீகிங் நகரத்துத் தலைவர்கள் ரகசிய ஐந்தாம் படையினரையும் அகதிகள் என்ற பெயராலே அனுப்பி வைக்கிறார்கள். அவர்களையும் அலட்சியம் செய்யாமல் நுழைய விடாமல் தடுத்தாகவேண்டும்.

இந்தியப் பிரதமர் நேரு நினைக்கிறார். கம்யூனிஸ்ட் சீனா மீண்டும் நட்புறவில் நம்பிக்கையுடன் இணைந்திருக்கும் என்று. இது மாபெரும் தவறாகும். தொடர்ந்து இந்திய சீன நட்பு நிலைத்திருக்கும் என்றும் பேசுகிறார். இதுவும் மற்றோர் தவறாகும். நேருவினாலே செயல்பட முடியவில்லை. சீனத்தவர் தருகின்ற சொல்லடிகளைத் தாங்கிக்கொள்கிறார். இந்தியாவின் முகத்திலும் எதிரிகளின் கைவீச்சைத் தாங்கும்படி செய்கிறார். இவைகளுக்கெல்லாம் காரணம் நேருவின் குழப்பமடைந்த சிந்தனையும் தவறான கணக்கீடுகளும்தான்! தாயகப்பற்றுள்ள எவனும் இதனை எதிர்க்கத்தான் செய்வான்! சீனக் கம்யூனிஸ்ட்களை மதிப்பிடும் நேருவின் தவறு ஒரு காலத்தில் இட்லரை சமாதானப் பிரியன் என்று நேவ்லி சேம்பரிலின் எண்ணியதுபோலாகும்! என்றைக்காவது ஒரு நாள் சீனா நேருவைக் கீழே தள்ளப் போவது உறுதி. இந்த விபத்திலிருந்து நேரு சர்க்கார் தப்ப வேண்டுமானால் அவர் இந்தியாவுக்காகவும் இந்தியர்களுக்காகவும் பேச வேண்டும். சீனக் கம்யூனிஸ்ட்களிடம் மன்னிப்புக் கேட்டுக்கொள்ளும் பாவனையில் சொற்களைச் சிந்தக்கூடாது! கொரில்லாப் போராட்டத்திலே வெற்றிபெற்ற கம்யூனிஸ்ட்கள் தங்களுக்கான இரைகளைத் தேடி அலைகிறார்கள். சிக்கிம் எல்லையோரங்களையும் மங்கோலியப் பகுதியினையும் அவர்கள் விழுங்கி ஏப்பம் விட்டுள்ளார்கள்! மக்கள் சக்திக்கு முரண்பட்ட எண்ணங்கொண்ட சீனாவை ஐக்கிய நாடுகளின் அவைக்கு அழைத்துச் செல்வதைக் காட்டிலும் திபேத் பிரச்னையை உலக அரங்கில் எடுத்துப் பேசிப் பரிகாரம் காண்பது நேருவின் கடமையாகிறது. அதற்கான ஆதாரங்களும் நிறைய உண்டு. இந்தியாவின் குறுக்கிலும் நெடுகிலும் உள்ள மக்களின் உள்ளம் தோறும் திபேத்தியப் பிரச்னை முக்கிய இடம் பெற்றுள்ளது. இந்த மக்களின் இதய வேட்கைகளை எடுத்துரைப்பதாகப் பண்டித நேருவின் செயல்களும் பேச்சுக்களும் இன்னும் உருவாகவில்லை. இந்தியத் துணைக்கண்டத்திலும் – உலகின் பெரும் பகுதியிலும் உள்ள நல்லறிவாளரும் போற்றுகின்ற வகையில், பண்டித நேருவின் தலைமை இந்தத் துணைக்கண்டத்தை அழைத்துச் செல்ல லாயக்கற்றிருப்பதை திபேத் விவகாரம் மிக மிக விவரித்துள்ளது. சாதாரண அரசியல் அறிவுகொண்ட மனிதனுக்குக் கூட நேருவின் கெஞ்சிப் பேசும் போக்குகள் பெரிய ஏமாற்றத்தைத் தருகின்றன. ஆனால் சிவப்புச் சீனா எப்போதும் ஆணவக் குரலில் பேசுகிறது! நேரு ஒரு ஏமாற்றத்தின் அவமானச் சின்னம் என்பதை உலகம் தெரிந்துகொண்டுள்ளது! இந்தப் பழி துடைக்கப்பட வேண்டும். பெரும் பகுதி மக்களிடையே இந்தியக் கம்யூனிஸ்ட்களும் துணை நிற்க வேண்டும். திபேத்தியரின் துயர் துடைக்க வேண்டும்! ★

வாழ்க! வாழ்க!

*மதுரையில் 28-5-'59 காலை 10 மணியளவில், மதுரைத் தோழர் **மா. இராசாமணி** தோழியர் **நாகரெத்தினம்** அவர்களை வாழ்க்கைத் துணைவியாக ஏற்றார். மணவிழா செந்தமிழ்க் கல்லூரி முதல்வர் திரு. **இரா. வே. நாராயணன்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தென்றல் மா. பாண்டியன், திரு. கு. இந்திரசித்து, திரு. எஸ். முத்து எம். சி. ஆகியோர் வாழ்த்துரைத்தனர். மணமக்களுக்குப் பல நலனும் பெருவளமும் பெருக, நம் வாழ்த்துக்களும் உரித்தாகுக! வாழ்க! வாழ்க!*

ஜூலை 10உ முதல் வெளிவருகிறது!

"இனமுழக்கம்"

(வார ஏடு)

ஆசிரியர்: சி. பி. சிற்றரசு

முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் தேவை.

பதிப்பாளர்: கண்ணப்பா வள்ளியப்பன்

4, இராசகோபால் நாய்க்கன் சந்து,
சிந்தாதிரிப்பேட்டை :: சென்னை - 2.

ஜூன் 12-ந் தேதி முதல்--சென்னை
மற்றும் தென்னாடெங்கும்
மாடர்ன் தியேட்டர்ஸ்
தலை கொடுத்தான் தம்பி
டைரக்ஷன்
T.R. சுந்தரம்.
கதை, வசனம்: முரசொலி மாறன் M.A

EASTERNS

வினா - விடை

கடலரசன் பதிலளிக்கிறார்

சி. க. தேவராசன், சிறுகையூர்.

கம்யூனிஸ்ட்களைத் தாக்கும் தி. மு. கவினர் சென்னை நகர மன்றத் தேர்தலில் அவர்களுடைய ஆதரவை நாடியது ஏன் ?

. தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்களையும் அவர்களின் அரசியல் கொள்கை கோட்பாடுகளையும் கணக்கிடும் முறைகளில் கழகம் தன் கடமையைச் செய்து வருகிறது. அதுபோலவே தமிழ்நாட்டில் பல இடங்களில் காங்கிரஸ் கட்சி தன்னுடைய பரம்பரை உரிமையை இழந்துவிட்ட பின்பும், கழகத்தவர் கம்யூனிஸ்ட்கள் போன்ற மாற்றுக் கட்சியினர் நகராட்சியில் பங்கு பெறுவதை விரும்பாமல் சதிவேலைகள் செய்துகொண்டு இடம் பிடிக்க முனைந்தது. இந்த இழிசெயலை முறியடிக்கும் காரணமாகவே கம்யூனிஸ்ட்களின் ஒத்துழைப்பைப் பெறவும், ஆதரவளிக்கவும் கழகம் முன்வந்துள்ளது. நம் பொதுச்செயலாளரும், கம்யூனிஸ்ட் வெங்கட்டராமனும் வெளியிட்டுள்ள அறிக்கை, ஏ. எஸ். கே. அய்யங்காரும், ஜனசக்திப் பத்திரிகையும், வி. பி. சிண்டனுடைய கட்டுரையும் நன்கு விளக்கியுள்ள இந்த ஒத்துழைப்பு ஏற்பாட்டினால் நகராட்சியில் கொள்கைப் பிரச்னைகள் எழவில்லை. சென்னையும் கோவையும் கழகத்தின் இலட்சியப் பாதையில் எந்த மாற்றமும் தரவில்லை.

★

பி. ச. சாகுல் அமீது, நாகப்பட்டினம்

கம்யூனிஸ்ட் காம்ரேடுகள் கோவிலுக்குக் காவடி தூக்குவது ஏன் ?

தங்களைப் பகுத்தறிவுக்குப் பகைவர்களாக்கிக் கொண்டுப் பொது மக்களுக்கும் அறிமுகப்படுத்திக் கொள்வதற்காகத்தான் ! வேடசந்தூர் மதனகோபால் என்ற மாஜிக் கம்யூனிஸ்ட் எம். எல். ஏ. கோயில் விழா நடத்தியதாகச் செய்தி வந்தது இதற்கோர் சான்றாகும். அகில இந்தியக் கம்யூனிஸ்ட்கள் இத்தகைய பகுத்தறிவற்ற செயல்களைப் பற்றியெல்லாம் கவலைப்படுவதில்லை. தன்னைச் சீர்திருத்தச் செம்மலாகக் கருதிக்கொண்டிருக்கும் ஜீவானந்தப் பாகவதர் அவர்கள் தன்னுடைய சீடர்களின் செயல்களைக் கணக்கிடுவதில்லை. ஒரு தீவிரக் கம்யூனிஸ்ட் மதுரைப் பொதுக்கூட்டம் ஒன்றில் ரயில்வே வட்டாரத்து மாவீரன் அனந்தன் நம்பியார் முன்னிலையில், கோவிலில் மொட்டையடித்துக்கொள்ளப் போவதற்கு விடுமுறை விதிகளை மாற்ற வேண்டும் என்றார். புரட்சிப் பாதையிலே கலகக் கொடி பிடித்து முழக்கும் நம்பியார்-அதனையும் ஆதரித்துப் பேசி, ரயில்வே மானேஜர்களுக்கு எச்சரிக்கை செய்தார் ! இதுபோன்ற நிலைமைகளினால்தான் கம்யூனிஸ்ட்கள் மூட எண்ணங்களைக் கண்டிப்பதற்கு முன் வர மறுக்கிறார்கள் ! அகில உலகக் கண்ணோட்டக்காரர்களுக்கு கும்பமேளாக்களும், ராமலீலாக்களும், மட்டையடித் திருவிழாக்களும் மிகவும் அவசியமானவைகளாக இருக்கின்றன. கோவிலுக்கு காவடி தூக்குவதும், மதனகோபாலர்கள் விழா நடத்துவதும், செங்கொடிச் செம்மல்கள் திருவிழாக் கும்பலில் உண்டியல் குலுக்குவதும், லெனின் வழிச் செல்லுவதாகச் சொல்லுகின்ற அய்யங்கார்களுக்கும் நம்பூதிரிப் பார்ப்பனர்களுக்கும் அழகல்ல; அறிவுடைமையுமல்ல இதை என்றைக்காவது உணருவார்களா என்பதுதான் எம் போன்றோர்க்குள்ள ஒரு சந்தேகமாகும் !

★

பா. இராசேந்திரன், கோவை.

கழக மூசொலிக்கும் மாறனைக் கம்யூனிஸ்ட் கட்சியின் சாதாரண எழுத்தாளரான முகவை ராசமாணிக்கத்துடன் ஒப்பிட்டதை வன்மையாகக் கண்டிக்கிறேன். இதனை ஒப்புக்கொள்ள மறுப்பீர்களா ?

மறுக்கவில்லை நண்பரே ! ஆனால் இந்த ஒப்புவமை காட்டி விளக்கிய கட்டுரையில் திரைப்படப் பிரச்னை இருந்ததால் இப்படி இணைக்க நேரிட்டது. கம்யூனிஸ்ட் கட்சியில் திரைப்படத் தொடர்பு கொண்டுள்ள நபர் இவர் ஒருவராக மட்டுமே இருப்பதால் நம்முடைய மாறன் அவர்களுடன் ஒப்பிடத்தக்க வாய்ப்பினைப் பெற்றார். தங்களின் கண்டத்தையும் பெற்றுள்ளார். கலையுலகில் கம்யூனிஸ்ட்கள் தரங்கெட்டவர்கள் என்பதை அவர்களே நன்கு உணர்ந்திருக்கிறார்கள். எனவேதான் அவர்கள் கம்யூனிஸ்ட் கலைஞர்கள் என்று சொல்லி. தமிழகத்தவரெல்லாம் கட்டாயம் நம்பித்தான் தீரவேண்டுமென்று கலைஞர்கள் குழுவினைக் காரைக்குடி மகாநாட்டில் அமைத்திருக்கிறார்கள். அவர்களின் வருங்காலத்தைக் கணக்கிடுவோம் !

★

ஜி. கே. வேலன், சத்திரப்பட்டி.

கம்யூனிஸ்ட்களின் உடனிருந்து அவர்கள் ஊழல்களை உளவறிந்த உங்களால் எதிர்காலத்தைக் கணிக்கமுடியுமா ?

நான் கம்யூனிஸ்ட்களுடனிருந்து உளவறிந்தேன் என்று உங்களுக்குச் சொன்னது யார் தோழரே ! கம்யூனிஸ்ட் கட்சியின் ஊழல்களை, கம்யூனிஸ்ட் தலைவர்கள் தெரிந்திருந்தாலும் சாதாரணக் கம்யூனிஸ்ட்களிடம் சொல்வதில்லை. நான் சில செய்திகளை அவ்வப்போது சொல்வதால் கம்யூனிஸ்ட் கட்சியிலேயிருந்துகொண்டே உளவறிந்தவன் என்று உங்களைப் போனறோர் எண்ண நேரிடுகிறது. இந்தியக் கம்யூனிஸ்ட்கள் தங்கள் செயல் முறைகளை "அண்டர் கிரவுண்டில்" தயார் செய்துகொள்கிறார்கள். கட்சி யூனிட்டுகளுக்குக் கட்டளை பிறப்பித்துவிடுகிறார்கள். இவர்களுடைய எதிர்காலத்தைப் பற்றிகம்யூனிஸ்ட் கல்யாணசுந்தரங்கள் சொன்னது பத்து ஆண்டுகளில் டில்லி செங்கோட்டையில் செங்கொடி பறக்கும் என்பதாகும் ! எட்டாத கனிக்குக் கொட்டாவி விடுகிறார்கள் என்பது என் எண்ணம். எதிர்காலத்தில் எவரெவர்க்கோ எடுபிடிகளாகப் போகிறார்கள் என்பதும் எதிர்பார்க்கக்கூடியதே !

★

மு. செல்வன், நமனசமுத்திரம்.

"ஆங்கிலம் ஆட்சி மொழியாகி விட்டால் திராவிட நாட்டுப் பிரச்னையை விட்டுவிடுவார்களா ?" என்று மாஜினியார் கேட்பது சரியா ?

மொழிப் பிரச்னையில் நாட்டுப் பிரிவினை மறைந்துவிடக்கூடியதல்ல ! பிரிந்து நிற்கும்போதுதான் தொடர்புக்கு ஆங்கிலம் தேவை. திராவிட நாட்டு விடுதலையென்பது மாஜினிகள் எண்ணியிருப்பது போல சில பல ஆசைகளுக்காக அல்ல ! தாயகத்தின் முழு விடுதலை என்பது கம்யூனிஸ்ட்களின் ஏக இந்தியத் தத்துவத்திற்கு வழங்கும் மரணச் சீட்டாகும் ! இதனை மதி குறைந்தோருக்கும் மறதிமிகுந்தோருக்கும் நீங்கள் நினைவூட்டுங்கள்.

★

மா. வேலுச்சாமி, எல்லை.

தமிழ்நாட்டுக் கம்யூனிஸ்ட்கள் திபேத்தைப் பற்றி என்ன சொல்கிறார்கள் ?

வடநாட்டுக் கம்யூனிஸ்ட்களுடைய கருத்துக்கள்தான் இங்கே இருப்பவர்களுக்கும் ! அவர்கள் சொல்வதைத்தான் இவர்கள் பேசவேண்டும் ! சீனா செய்தது மாபெரும் தியாகங்கள் என்கிறார்கள் ! திபேத்தில் கம்யூனிஸ்ட்களின் ஆதிக்கவெறி வளருவதுபோல இங்குள்ளோரின் அடிமைப்புத்தியும் வளர்கிறது.

★

எஸ். வி. பாண்டியன், சிறுகுடி.

மதுரையில் கம்யூனிஸ்ட்கள் நகர சபைத் தலைவராக வராதது ஏன் ?

காங்கிரஸ் சீர்திருத்தக் கமிட்டியினருடன் பேரப் பேச்சுக்கள் நடத்தினார்கள். கழுத்தறுப்பதில் கை தேர்ந்தவர்களான இவர்களை முத்துராமலிங்கரின் சீடர்கள் நன்றாக ஏமாற்றினார்கள். அகில உலகக் கண்ணோட்டக் கட்சிக்காரர்களை அங்கும் இங்கும் அலையச் செய்து கூட்டணி முறையை மறந்துதுணைத் தலைவர் தேர்தலில் போட்டியிடச் செய்தார்கள். தனிப் பெரும் கட்சியான கம்யூனிஸ்ட்கள் படுதோல்வியடைந்தார்கள் ! நகர சபையின் நிர்வாகக் குழுவில்கூட இடம் பெற முடியாமல் தவிக்கிறார்கள் ! கழகம் கைகொடுத்தும் தங்கள் ஆசைகளை நிறைவேற்ற முடியவில்லை. கூட்டணித் தலைவரின் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் வரும் நன்னாளை எதிர்பாருங்கள். கம்யூனிஸ்ட்கள் தயாராகிக் கொண்டுள்ளார்கள்.

★

இரா-மதிவாணன், கோவை.

'இம்ரே நாகி' என்பவர் யார் ? அவரைக் கொன்றவர் எவர் ? ஏன் ?

அங்கேரி நாட்டின் முதலமைச்சராக இருந்த இம்ரே நாகி-மாஸ்கோவிலேயுள்ள கம்யூனிஸ்ட் தலைவர்களின், ஆதிக்க வெறியர்களின் கட்டளைகளுக்குத் தலை வணங்க மறுத்து, அங்கேரி மக்களின் இதயத்து ஆசைகளுக்கும் முடிவுகளுக்கும் ஏற்ப ஆட்சி நடத்தினார். ரஷ்யாவின் ராணுவ நடவடிக்கையினால் அங்கேரி மக்களின் சுதந்திர எழுச்சி அடக்கப்பட்டது. 'இம்ரே நாகி' யூகோ நாட்டுத் தூதுவரகத்தில் அடைக்கலம் புகுந்தார். அவருக்கு எந்தவிதத் தீங்கும் செய்வதில்லையென்று உறுதிமொழி கொடுத்தார் ஜனேஸ்காதர் என்ற மாஸ்கோ ஏஜண்ட். குருஷ்சேவ் சர்க்காரின் ஆணைக்கிணங்க தீர்ப்பு வழங்கிய அங்கேரி ராணுவ நீதி மன்றம், இம்ரேநாகிக்கு மரண தண்டனை விதித்தது ! உலகெங்கிருந்தும் கண்டனக் குரல் கிளம்பியது. ஆனால் தமிழ்நாட்டிலேயிருக்கும் மாஸ்கோ தாசர்கள் மட்டும் இம்ரே நாகி கொல்லப்பட்டது சரியென்று வாதாடினார்கள் ! இவர்களுடைய தலைவர்களான டாங்கே, கிருஷ்ணய்யர்-கோவிந்த நாயர் போன்றவர்கள் இம்ரே நாகி கொல்லப்பட்டது மிகவும் கொடூரமான செயல் என்றுதான் தெரிவித்தார்கள் ! ஆளுக்கு ஆள் அங்கே மோதுதல் உண்டு என்பதற்கு ஒரு ஆதாரமாகிவிட்டது 'இம்ரே நாகி' கொலை !

★ ★ ★

— 1-ம் பக்கத் தொடர்ச்சி —

"சமாதானத்தின் பகைவர்" என்று அழைக்கப்பட்டார் எதிரணியினரால். உண்மை என்ன ?

பாஸ்டர் சமாதானத்திற்குப் பகைவரல்லர்-தற்காலிகமாக ! ரஷ்யாவின் வளர்ச்சியையோ, செல்வாக்கையோ மாய்ப்பதால், படை எடுத்துச் சாய்ப்பதுதான் ஒரே வழி. அமெரிக்காவோ நீண்ட ஒருபோருக்குப்பின் இப்போதுதான் வளமான சூழலைப்பெற்றுள்ளது. தன் பேச்சின் வழிச் செல்லும் ஜப்பான், பர்மா, பாக்கிஸ்தான் முதலிய நாடுகளில் டாலரை விதைத்திருக்கிறது. அமெரிக்கத் தொழிலாள வர்க்கமோ, சோஷலிஸத் தொழிற் சங்கங்களால் வளர்க்கப்படுகிறது. உண்ண உணவு-உடுக்க உடை-இருக்கஇடம்ஆகியவற்றைத் தரும் வசதியான சூழலை, போராடிப் போராடி நெடு நாட்களுக்குப்பின் இப்போதுதான் பெற்றிருக்கின்றனர். அவர்கள் விரும்புவதும் அந்த அளவுதான். இப்போது போர் மூண்டால் அமெரிக்காவுக்குத்தான் தொல்லை மிகுதி.

நீண்ட ஒரு போருக்குப் பின் இப்போதுதான் பெற்ற அமைதியைக் குலைப்பது யாராயிருந்தாலும் அமெரிக்காவின் நடுத்தர, கீழ்த்தர மக்கள் பழித்தே தீருவர். உள்நாட்டு மக்கள் உதவவில்லை என்றால் அமெரிக்காவின் அடிமை நாட்டு மக்கள் துணை வாராரோ? இரஷ்ய அணியைச் சாடாரோ? இப்படியும் கேட்கலாம். அந்த நாடுகளின் மக்கள் இப்போதுகூட வறுமையை அழித்துவிடவில்லை எப்படியாகிலும் அவர்களைப் பயன்படுத்திக்கொள்வதென்றால், அங்கே விதைக்கப்பட்டு இன்னும் பலன் தராதிருக்கும் டாலர் பயிர், போர் எனும் மாட்டால் மேயப்பட்டுவிடும். எனவே சொந்த நாட்டு அமைதியையும், பிறநாட்டில உள்ள வியாபாரத்தையும் ஒருங்கே இழக்க விரும்பாததால்தான், அதற்குரிய காலம் வரும்வரை போரைத தள்ளிப் போட்டுக்கொண்டே வந்தார், டல்லெஸ். அவரும் உயிரோடு இருந்து, காலமும் வாய்த்திருந்தால் கட்டாயம் போர்க் கொடியை உயர்த்தியிருப்பார்.

அன்றொரு நாள் ஒருவன் எழுதினான், அமைதி அவர் கையில் இருப்பதாக. இன்று சரித்திர நியாயம் சொல்கிறது, அமைதி அவர் கருத்தின் வெற்றியில் இருப்பதாக.

—மணிவேல்.

ஆசிரியர்: கண்ணதாசன். அச்சிடுபவர், வெளியிடுபவர்: சுப. அருணசலம், ஏ. எல். எஸ். அச்சகம், 2/127, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு.